Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (24.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 024

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

### அமைச்சர் பசில் தகவல்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நடவடிக்கை தொடர்ந்தும் .மேற்கொள்ளப்பட வுள்ளது. என்றும் வேலையற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் விரைவில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளது. என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 50,000 இலிருந்து 100,000 ஆக அதிகரிக்கும் நடவடிக்கை அரசாங்கத்தினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் மேல் மாகாணத்தில் 474 பட்டதாரி ஆசிரியர்களை சேவைக்கு உட்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே பொருளாதார அபிவி

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்த ஆண்டில் இந்திய மீனவர்கள் 420 பேர் கைது

கடந்த 10 மாத காலப்பகுதியில் யாழ். மாவட்ட கடற்பரப்பில் 420 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, யாழ் மீனவ பரிசோதனை அலுவலக உதவிப் பணிப்பாளர் நடராஜா கணேஷமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

கடல் எல்லையை மீறி சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட தென்னிந்திய மீனவர்களே இவ்வாறு கைதா

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.கட்சி எம்.பிக்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, அஜித்பெரேரா, நலீன் பண்டார மற்றும் ஆர்.யோகராஜன் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் குழுவினரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன நேற்றுப் பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பு - கொம்பனித்தெருவில் உள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் பயிற்சி கல்லூரியை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டில்லிக்கு விரைகிறார் கடற்படைத்தளபதி



## கூட்டுப்பாதுகாப்பு செயற்றிட்டம் விரைவில்

(கொழும்பு)

இந்திய-இலங்கை கடல் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் புதிய கூட்டுப் பாதுகாப்பு செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா நாளை இந்திய விஜயத்தை மேற்கொள்வார் என கடற்படை ஊடகப்பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கடற்படைத் தளபதியின் விஜயம் தென்னிந்தியாவில நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பயணம் ஒத்திவைக்கப் படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

திட்டமிட்டபடி இம்மாதம் 25ஆம் திகதி அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.இவ்விஜயத்தின் போது கடற்படைத் தளபதி பல தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இருநாடுகளின் கடல்விவகாரங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படும். 25 தொடக்கம் 30 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ விஜயம் மேற கொள்ளவுள்ள தளபதி இருநாடுகளின் நல்லுறவுக்கான அடிப்படை கலந்துரையாடலில் ஈடுபடுவார்.

மேலும் கடற்படைக்காக இந்தியாவிலிருந்து படகுகள் தருவிக்கப்படவுள்ளது கடற்படை நடவடிக்கைகளுக்கு அவை பயன்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமைகள் பாதுகாப்பு கண்காணிக்க விசேட குழு



### ஐ.நா.அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்யும் முகமாகவும் அது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விசேட குழு ஒன்றை அமைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு சமர்ப்பித்துள்ள தனது அறிக்கையொன்றில் ஐ.நா.வின் மனித உரிமை ஆணையாளர் சயிட் அல்ஹுசைன் மேற்படி தகவலைத்தெரிவித்துள்ளார். தன்னுடைய அலுவலகம், முன்னைய ஆணையாளரின் கீழ் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் மேற்கொண்ட செயற்பாடுகள் குறித்து சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட காலப் பகுதியில் ஆணைக்குழு

19 ஆம் பக்கம் பார்க்க

## ரஷ்ய போர்க்கப்பல் கொழும்பில் நங்கூரம்

(கொழும்பு)

ரஷ்யாவின் பாரிய போர்க்கப்பல் ஒன்று நேற்று அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மொஸ்க்வா எனும் பெயருடைய குறித்த போர்க்கப்பல் நட்புறவு அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தந்திருப்பதாக கடற்படை அறிவித்துள்ளது.

கப்பல் கொழும்பில் தரித்திருக்கும் காலப்பகுதியில் மரியாதை நிமிர்த்தமாக கடற்படைத் தளபதியை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும் கப்பலின் கட்டளைத்தளபதி உள்ளிட்டோர் திட்டமிட்டிருந்தனர்.

மொஸ்க்வா போர்க்கப்பல் இன்று மாலை கொழும்புத் துறைமுகத்திலிருந்து மீண்டும் புறப்படவுள்ளதாக கடற் படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## “ஆவா” குழு தலைவர் நேற்று விடுதலை

ஆவா குழு தலைவர் வினோதன் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கண்ணகி அம்மன் கோவிலடி இணுவில். மேற்குப் பகுதியைச் சேர்ந்த குமரேசரத்தினம் வினோதனை (ஆவா) கடந்த தை மாதம் 4 ஆம் திகதி கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர். ஆவா உட்பட மேலும் 11 பேரை கைது செய்து இவர்கள் அனைவரும் ஆவா குறூப் அங்கத்தவர்கள் என்றும், யாழில் இடம் பெற்ற பல்வேறு கொலை, கொள்ளை,வாள்வெட்டு சம்பவத்

19 ஆம் பக்கம் பார்க்க

புதிய “பட்ஜெட்” இன்று உள்ளே → பக்கம்–06இல்

## இன முரண்பாட்டை ஏற்படுத்த புலிகள் மீண்டும் முயற்சி

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



நாட்டில் உள்ள இனங்களுக்கிடையில் பேதங்களை ஏற்படுத்தும் முயற்சியில் புலிகள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கப்பட்டமை தொடர்பில் அரசு விசேட கவனம் செலுத்துவதாகவும் இலங்கையில் ஆயுதம் ஏந்திய புலிகள் இல்லை எனினும் இன பேதங்களை ஏற்படுத்தும் நபர்கள் இப்போதும் உள்ளனர், என்றும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மேலும் தெரிவித்தார்.

நேற்றுக்காலை அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் தடையை நீக்கியதனூடாக அவர்கள் தம்மை பலப்

19 ஆம் பக்கம் பார்க்க



# சின்னஞ்சிறு செய்திகள்

## 'ஞானச்சுடர்' இன்று வெளியீடு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு வாரமும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுகள் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவையால் ஒவ்வொரு மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச் சுடர் இன்றும் இடம்பெறவுள்ளது.

## தேசிய வாசிப்பு மாத புத்தகக் கண்காட்சி

(வடமராட்சி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கட்டைவேலி உப அலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி சிறுவர்களுக்கான புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.செல்வராசா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வருமான பரிசோதகர் ஐ.தங்கராஜா ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். (18)

## நல்லூர் சுவாமி வீதியுலா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி விரத நிகழ்வினை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை தினமும் பிற்பகல் 5.30 மணி தொடக்கம் பிற்பகல் 6.30 மணி வரை சுவாமி வெளி வீதியுலா வரவுள்ளதனால் குறித்த நேரங்களில் கோயில் வீதியில் பயணிப்பவர்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் கேட்டுள்ளார்.

## சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். வழமை போல் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (08)

## கந்தசஷ்டி இன்று ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் அம்பலாந்துறை வேம்படி கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி விழா இன்று ஆரம்பமாகின்றது.

ஆறு நாட்கள் நடைபெறும் இவ்விழா தினந்தோறும் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. அபிஷேகம், பூசை, வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதி உலா இடம்பெறும்.

6 ஆம் நாளான எதிர்வரும் புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு சூரசம்காரம் இடம்பெற்று, பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு பாரணை பூசை இடம்பெற்று அன்னதான நிகழ்வும் இடம்பெறுவதுடன், மாலை திருக்கல்யாண வைபவம் இடம்பெறுவதுடன், சுவாமி வீதியுலாவும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கல்வி முதுமாணி 11ஆவது பிரிவுக்கு நாடு தழுவியதாக 100 பேர் தெரிவு

## நேற்று யாழ்.பல்கலையில் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட கல்வி முதுமாணி 11ஆவது பிரிவு கற்கைநெறிக்கு போட்டிப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த 100 மாணவர்களின் பெயர் விபரம் நேற்று வெளியானது.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

மேற்படி விடயமாக மேலும் தெரிவிக்கையில், யாழ்.பல்கலைக்கழகத்தின் 10ஆவது பிரிவு கல்வி முதுமாணி மாணவர்களது பரீட்சை மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகின்றன.

11ஆவது பிரிவிற்கான கல்வி முதுமாணி கற்கை நெறிக்கு (Master of Education) ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் நாடு தழுவிய ரீதியில் கோரப்பட்டு 750 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவ்வாறு தோற்றியிருந்தவர்களில் 200 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

இவ்வாறு நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் பெயர் விபரம் நேற்று பேராசிரியர் எஸ்.சத்தியசீலனால் வெளியிடப்பட்டு உயர்பட்ட பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்வி முதுமாணி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தனித்தனிக் கடிதங்கள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கற்கை நெறியின் தலைவராக கலாநிதி திருமதி அனுஷா சத்தியசீலன், இணைப்பாளராக கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம் ஆகியோர் செயற்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாவனையாளர் அதிகாரசபை அதிரடி நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

காலாவதியான இலவச இணைப்புகள், நிறை குறைந்த பாண் விற்பனை தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையில் யாழ்.செயலக இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார். காலாவதியான பொருட்களை விற்பனை செய்தவர்கள் மீது 39 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர்,

மென்பான விற்பனையின் போது இலவச இணைப்புக்கள் வழங்காத 2 வர்த்தகர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் அறவிடப்பட்டதாகவும், நிறை குறைவான பாண் உற்பத்தி செய்த இரு பேக்கரி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

# கைதடி முதியோர் இல்லத்தில் தீபாவளி திருநாள் கொண்டாட்டம்

தீபாவளித் திருநாளான நேற்று முன்தினம் தென்மராட்சி கைதடியில் உள்ள முதியோர் இல்லத்தில் இனிய இதயங்கள் மற்றும் லயன்ஸ் கழகங்களும் இணைந்து பல்வேறு நிகழ்வுகளையும் நடத்தினார்கள்.

முதியோர் இல்லத்தில், இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.விக்கினராசா தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக லயன்ஸ் கழகங்களின் 306-1 பி.யின் ஆளுனர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் மற்றும் அவர் பாரியார் லயன் சீமாட்டி றோசினியும் சிறப்பு விருந்தினராக இரண்டாவது ஆளுனர் லயன் வி.தியாகராசாவும் கலந்து கொண்டார்கள்.

மங்கள விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் ஓரங்க நாடகம் உட்பட மற்றும் பல பொழுதுபோக்கு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

• கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 125 பேருக்கும் பல்வேறு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், மருந்து வகைகள், பால்மா வகைகள், உணவுப் பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில், யாழ்ப்பாணம், மானிப்பாய் வட்டம், மானிப்பாய் நகரம், தீவகம், நல்லூர், சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், தெல்லிப்பளை, மல்லாகம், உரும்பிராய் மற்றும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். (63)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2574 திகதி 22-10-2014

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள்

38 43 45 63

போனஸ் இல: 20

ஜக்பொட் பரிசு ரூ. 13,744,300/- வெல்லப்படவில்லை

| இணைப்பு இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 193341 | 20/- | 3,866,820/- |
| 2 இல | 13732 | 100/- | 1,373,200/- |
| 3 இல | 290 | 1,000/- | 290,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7673 | 40/- | 306,920/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 577 | 1,000/- | 577,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,744,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 9167 | 100/- | 916,700/- |
| 2 இல + போனஸ் இல | 415 | 500/- | 207,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 368 | 200/- | 73,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 225600 | | 10,447,240/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 14,270,750/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3531)


## நீதி நூல் மனனப் போட்டி

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடம் தோறும் நடத்திவரும் நீதிநூல் மனனப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம்-1, தரம்-2 மாணவர்களுக்கு நடைபெறும் இவ் மனனப் போட்டிக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 700 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

• இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவ சமய அபிவிருத்திக்கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

## மழையின் மத்தியிலும் புனரமைப்புத் துரிதம்

யாழ்.பண்ணை ஊர்காவற்றுறை வீதி மற்றும் மண்டைதீவு பிரதான வீதி என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் மழையின் மத்தியிலும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முக்கிய இவ்வீதிகளின் குறுக்காகவுள்ள பாலங்கள் நிர்மாணிக்கும் பணிகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வீதியின் இரு மருங்கிலும் கற்கள் போடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது மழைநீர் வீதியின் பள்ளமான பகுதிகளில் தேங்கி பயணிகள் போக்குவரத்துக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. இருந்தும் வாகனங்களின் நெரிசலுக்கு ஏற்ப போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக போக்குவரத்துச் சிரமங்கள் குறைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி, அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)

தீபாவளியன்று நடைபெறவிருந்த

# மல்லாகம் நரியிட்டான் ஆலயத்தில் மிருக வேள்வி தடுத்து நிறுத்தம்

(மல்லாகம்)

தீபாவளித்தினமான நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நரியிட்டான் வைரவர் ஆலயத்தில் இடம்பெறவிருந்த மிருகபலி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சைவ மகா சபையும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் பயனாக இந்த வேள்வி நிறுத்தப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்படாத காரணத்தால் இந்த வேள்வியை நடாத்துவதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனால் ஆலயத்தில் பலியிடுவதற்காக கொண்டுவரப்பட்ட 25 இற்கு மேற்பட்ட ஆடுகள் திருப்பிக்கொண்டு செல்லப்பட்டன.

மேற்படி ஆலயத்தில் வருடாந்தம் தீபாவளி தினத்தன்று மிருக பலியிடுதல் நடைபெற்று வந்தது. ஆனால், இவ்வருடம் ஆலயத்தில் மிருக பலி நடாத்துவதற்கு சனசமூக நிலையம் ஒன்று எதிர்ப்பை வெளியிட்டது. இது தொடர்பில் சனசமூக நிலையத்தால் வலி.வடக்கு பிரதேச சபை மற்றும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டன.

இந்த நிலையில் ஆடுகள் வெட்டுவதாயின் சட்டரீதியான வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்று தெரிவித்த தெல்லிப்பளை பொலிஸார் பொதுச் சுகாதார பரிசோதகரால் ஆடுகள் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படாமல் ஆடுகளை வெட்ட அனுமதி வழங்க முடியாது என்றும் தெரிவித்தனர். மீறி ஆடுகளை வெட்டினால் வெட்டுபவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் எச்சரித்தனர். இதனால் குறித்த ஆலயத்தில் இடம்பெறவிருந்த மிருக பலி தடுக்கப்பட்டுள்ளது.

# கோணப்புலம் நலன்புரி நிலைய மாணவர்களுக்கு "நாம் நண்பர்கள்" அமைப்பால் கற்றல் உபகரணங்கள்



(மல்லாகம்)

மல்லாகம், கோணப்புலம் நலன்புரி நிலையத்திலுள்ள கல்வி கற்கும் 184 மாணவர்களுக்கு, "அனைவருக்கும் கல்வி" என்ற நன்நோக்கில் செயற்படும் 'நாம் நண்பர்கள்' அமைப்பால் கற்றல்உபகரணங்களும் சிற்றுண்டிகளும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நாம் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த தொழிலதிபர் லோகேஸ்வரன் தனது மகன் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 176 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசிலில் சித்தியடைந்தமையை முன்னிட்டு போரினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் வாழும் மாணவர்களும் சிறப்பான கல்வியைப் பெறவேண்டும் என்ற நன்நோக்கில் இந்தக் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

நிகழ்வின் இறுதியில் மாணவர்களை மகிழ்வூட்டும் அரங்க ஆற்றுகை நிகழ்வும் நாம் நண்பர்கள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்டது. (90, 48)

# கந்த ஷஷ்டி விரதம்

சாவகச்சேரி விளைவேலி துர்க்காதேவி தேவஸ்தான கந்த ஷஷ்டி விரதம் இன்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு தினங்கள் இடம்பெறவுள்ளது. தினமும் மாலை 3.00 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறுவதுடன் ஆறாம் நாளான புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு சூரசங்காரம் இடம்பெற்று முருகப் பெருமானுக்கு பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறும்.மறுநாள் காலை பாரணை பூசை இடம்பெறுவதுடன் மாலை திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (இ)

# அடுப்புக்குள் வீழ்ந்த குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியிலுள்ள வீடொன்றின் அடுப்புக்குள் வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தையொன்று, சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியை சேர்ந்த ஜீவாகரன் மேகித்தியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

உருத்திரபுரத்திலிருந்து காங்கேசன்துறை வீதியிலுள்ள உறவினர் வீட்டுக்கு பெற்றோருடன் சென்றிருந்த அக்குழந்தை, கடந்த 13ஆம் திகதி அவ்வீட்டிலுள்ள அடுப்புக்குள் தவறி வீழ்ந்துள்ளது.

நீண்ட நேரமாக அடுப்புக்குள் குழந்தை இருந்தமையால் குழந்தையின் பின்பகுதி கடுமையான பாதிப்பிற்குள்ளாகியது.

இதனையடுத்து, குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. இருந்தும், சிகிச்சை பலனின்றி குழந்தை கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளது.

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –14




இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண வேணும் எண்டால், இதுவரையிலயும் நாங்கள் செய்த போராட்டங்களை ஒரு தடவை காய்தல் உவத்தல் இல்லாமல் வெளிப்படையாக மீளாய்வு செய்ய வேணும். முழுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்திப் பாக்கோணும்.

அதைப்போல இதுவரையிலயும் நாங்கள் நம்பிய இந்தியா தொடக்கம் நோர்வே, அமெரிக்கா, ஐ.நா போன்ற சர்வதேச சமூகம் என்ன மாதிரியான நன்மைகளைத் தந்தன? எங்கட நம்பிக்கைகளுக்கெல்லாம் என்ன நடந்தது எண்டதையும் நாங்கள் ஆராய வேணும்.

எப்பவும் பெரும்பான்மையான தமிழர்களும் தமிழ்த் தலைமைகளும் ஆட்சியில இருக்கிற அரசாங்கத்தோட எதிர்த்துக்கொண்டேயிருக்கினம். இந்த எதிர்ப்பால கிடைச்ச நன்மைகள் என்ன? தீமைகள் என்ன? எண்டதையும் கணக்கிட வேணும்.

சர்வதேச சமூகத்தையும் பிராந்திய சக்தியையும் தமிழ்நாட்டையும் நம்பிய அளவுக்கு இங்கே உள்ள பிற சமூகத்தின் தலைவர்களையும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் நம்பியிருக்கிறமா?

இலங்கையில் உள்ள ஏனைய சமூகங்களிடம் எங்கட பிரச்சினையை தெளிவுபடுத்தியிருக்கிறமா?

அவர்கள் எங்கட பிரச்சினையைப் புரிந்து கொள்ளுகிற அளவுக்கு நாங்கள் என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறம்?

இந்தப் பிரச்சினையை இன்னும் நாங்கள் தீர்க்காமல் இப்பிடியே இழுத்தடிச்சுக் கொண்டிருந்தால், இன்னும் நாங்கள் காரணங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தால் மக்களின்ரை எதிர்காலம் எப்பிடியிருக்கும்?

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் என்பது எப்பிடி இருக்கோணும்?

அந்த அரசியலைச் செய்யிறதுக்கு விவேகமும் அர்ப்பணிப்பும் முக்கியமாகத் தேவையல்லவா! இந்த விவேகத்தை தமிழ்த்தரப்பு எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கு? போராளிகளைத் தவிர, மிதவாத அரசியல்வாதிகள் எந்த அளவுக்கு மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்திருக்கினம்?

இதையெல்லாம் செய்தால்தான் நாங்கள் புதிசாக எதைப்பற்றியும் யோசிக்கலாம்.

ஆனால், இப்ப நடக்கிறது எப்பிடியிருக்குதெண்டால்... 'எல்லாரும் ஏறி விழுந்த நொண்டிக் கழுதையில சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்த மாதிரித்தான் ஒவ்வொருத்தரும் வந்து ஒவ்வொரு கதையைச் சொல்லித் தங்கட பதவிக்காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கினம்.

முந்திச் செல்வநாயம், அமிர்தலிங்கம், பிரபாகரன் ஆட்கள் சொன்ன கதையைத்தான் இப்ப சம்பந்தனும் சுமந்திரனும் விக்கினேஸ்வரனும் சொல்லுகினம்.

இதையெல்லாம் புதுசாகக் கேட்கிறவைக்கு – கடந்த காலத்தில என்னவெல்லாம் நடந்திருக்கு எண்டு தெரியாதவைக்கு – இது அருமையான மருந்து போலத்தான் தெரியும்.

ஆனால், கடந்த கால வரலாற்றைத் தெரிஞ்சவைக்கு இந்த விளையாட்டைப் பார்க்க விசர்தான் வரும்.

அரசியல் எண்டது வரலாற்றோட நூறுவீதமும் சம்பந்தப்பட்டது...

கடந்த காலத்தைப்பற்றி முறையாக ஆராயாத எந்தச் சமூகமும் அரசியலில் வென்டதாகச் சரித்திரமேயில்லை.

தமிழர்கள் எப்பவும் மற்றவையில பிழையைக் காணுகிற அளவுக்குத் தங்கட தவறுகளைப்பற்றி ஒரு நாளும் ஆராயிறதில்லை. அதுக்குத் தயாரும் இல்லை.

இதாலதான் தொடர்ந்தும் பிழைகள் நடந்து கொண்டிருக்கு.

ஏதோ அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிச் சாட்டி தங்கட அரசியல் நலன்களையும் தங்கட பதவி, பவிசுகளையும் எப்பவும் பெற்றுக்கொள்ளலாம் எண்டு தமிழ்த்தலைமைகள் எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது.

இப்பிடி எண்ணிக்கொண்டிருந்த அமிர்தலிங்கத்தின்ரை அணியை அண்டைக்குத் தமிழ் இயக்கங்கள் தீர்த்துக்கட்டி வெளிக்கிட்டதை நாங்கள் நினைச்சுப் பாக்கோணும்.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் அமிர்தலிங்கம் சொன்னார் இனித் தமிழீழத்திலதான் அடுத்த தேர்தல் நடக்கும் எண்டு.

இந்தச் சொல்லைக் கேட்ட அண்டையான் இளைஞர்கள் எல்லாம் அமிர்தலிங்கத்தின்ரை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்குகளை அள்ளி அள்ளிப் போட்டிச்சினம்.

ஆனால், அடுத்த தேர்தலை எப்பிடித் தமிழீழத்தில நடத்திறது எண்டதைப்பற்றி அமிர்தலிங்கத்துக்கும் விளக்கமில்லை. அவற்றை அணியில இருந்த தலையாட்டின ஆட்களுக்கும் விளக்கமில்லை. அப்பிடி நடக்கக் கூடிய சாத்தியமும் இல்லை.

அமிர்தலிங்கம் அணி சளாய்த் துடங்கிச்சு.

இதால ஆத்திரமடைஞ்ச பெடியள் அமிர்தலிங்கத்தையும் அவற்றை ஆட்களையும் துரோகிகள் எண்டு மண்டையில போட வெளிக்கிட்டாங்கள்.

விழுந்தவை விழ, மற்றவையெல்லாம் தப்பியோடிப்போய், தமிழ்நாட்டில தஞ்சம் புகுந்திச்சினம்.

பதினைஞ்சு வருசமாகத் தலைமறைவாக இருந்திட்டுக் கொழும்புக்கு வந்த அமிர்தலிங்கத்தை புலிகள் 1990 இல் போட்டுத்தள்ளிச்சினம்.

தியாகியாக ஒருகாலம் போற்றப்பட்ட அமிர்தலிங்கம் துரோகி எண்டு தூற்றப்பட்டார்.

இப்பிடியொரு நிலைதான் இப்பவும் இருக்கு.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கழிவிரக்கமும் காழ்ப்புமனமும்...

2009 மே மாதத்திற்குப் பிறகு புலிகள் ஆயுதம் ஏந்தவில்லை, வன்முறைகளில் ஈடுபடவில்லை என்பதை ஆதாரம் காட்டி ஐரோப்பிய நீதிமன்றம் புலிகள் மீதான தடையை ரத்து செய்வதாக அறிவித்தது அல்லவா?

அவ்வளவுதான், தமிழ் இணையங்களிலும் பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் இந்தத் தீர்ப்பு வரலாற்றுத் தீர்ப்பு எனவும், மகிந்தருக்கு அடி என்றும், இலங்கை அரசுக்கு திண்டாட்டம் என்றும் பத்தி பத்தியாக செய்திகள் வெளியானதைப் பார்த்தோம்.

அதாவது ஐரோப்பிய நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பால் தமிழ் மக்களுக்கு என்ன பிரயோசனம் நடந்துவிடப் போகிறது என்பது பற்றி யாருக்கும் எந்த அக்கறையும் இல்லை.

இலங்கை அரசாங்கம் அந்தத் தீர்ப்பைப் பிடிக்காதது போல ஏதாவது முகக்குறி காட்டுகிறதா? அது போதும். நாம் கிளுகிளுத்துப் போய்விட வேண்டியதுதான்; தமிழர்களுக்கான வரலாற்றுத் தீர்ப்பு இது என்று கொண்டாடிவிட வேண்டியதுதான்!

இது என்ன தமிழ் மொக்குத்தனம் என்று தெரியவில்லை. அமெரிக்காவில் ஒபாமா வென்றால், இலங்கை அரசுக்குக் கஷ்டம் ஆரம்பிக்கப் போகிறது என்று மகிழ்கிறோம். இந்தியாவில் மோடி வென்றால், “இலங்கையரசுக்கு இனித்தான் இருக்கு விளையாட்டு” என்று எழுதுகிறார்கள். நாம் புல்லரித்துப்போய்க் காத்திருக்கிறோம்.

இங்கிலாந்திலிருந்து கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வந்துபோனால், அதற்கும் ஏதோ அதிர்ஷ்டக் குறி சொல்லி, “அரசு இனித் தப்ப முடியாது” என்று எல்லோரும் ஒத்தபடி எழுத, நாம் வாசித்துக் கிறுகிறுத்துப் போகிறோம்.

நவநீதம்பிள்ளையம்மா இலங்கையரசைக் கண்டித்துப் பேசுவதையெல்லாம் தமிழர்களின் விடிவுகாலத்திற்கான மணியோசையாகவே நாம் மயங்குமளவுக்கு எத்தனையெத்தனை கட்டுரைகள், செய்திகள் விளக்கங்கள்! ஆனால், நமக்கென்ன தீர்வு என்று இன்னும் தெரியவில்லை; அம்மா இப்போது எங்கிருக்கிறாவென்றும் தெரியவில்லை.

பிறகு வந்தவரும் சும்மா ஆளில்லை இலங்கையரசை உலுப்பிப் போட்டுத்தான் விடுவார் என்று நம் பத்திரிகைகள் இணையங்கள் அடித்துச் சொன்னமாதிரி ஒன்றும் நடைபெறுவதாயும் காணோம்! சரி, அவர் உலுப்பி நமக்கு ஆகப்போவதென்ன என்றும் ஆரும் சொல்வதாயும் காணோம்!

இலங்கை அரசை மிரட்டுகிறவர்கள் அல்லது மிரட்டக்கூடும் என்று நாம் கற்பனை செய்கிற யாராக இருந்தாலும் அவர்களிடம் போய்க் கெஞ்சத் தயாராகிவிடுகிறோம். (இங்கே இருப்பவர்களாயினும் சரி வெளிநாடுகளில் போயிருப்பவர்களானாலும் சரி)

இலங்கை ஜனாதிபதியை எதிர்த்துச் சொல்லப்போகும் அவர்களது வார்த்தைகளுக்காக வடக்குத் தெற்கு மேற்கின் கால்களிலெல்லாம் விழுந்தெழும்பிக் கொண்டிருக்கிறோம்...

இதனால், அடிப்படையில் மேற்குலகினரை ஏற்காத, தாம் வாழும் நாட்டை நேசிக்கும் சிங்களப்பொதுமனதிடமிருந்து மேலும் மேலும் விலகிக்கொண்டிருக்கிறோம்.

நாம் தேடுவது நம் தமிழ்மக்கள் அரசியலுரிமைகளைப் பெற்று வாழ்வதற்கான வழியை அல்ல... மாறாக, இலங்கையரசை மிரட்டக்கூடியவர்களைத் தேடியடைந்து, அவர்கள் எத்தகைய மனித விரோத சக்திகளாக இருந்தாலும் பரவாயில்லை...நமக்கான பேரம் பேசும் பலமாக இருப்பார்களா என்பதை மட்டும் பார்க்கிறோம்.

மிக ஆழமான இனஎதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் நம் தலைவர்கள். இவர்கள் பின்னால்தான் 80 வீதத் தமிழர்களை, ராஜபக்சவைத் தோற்கடிக்கும் ஒரே காரணத்திற்காக திரட்டியவர்கள் நம் புத்திஜீவிகள்...!

ராஜபக்சவை சிங்கள சமூகத்தை எதிர்ப்பரென்றால் அது மோடியோ அமெரிக்காவோ இஸ்ரேலோ எமது மக்களின் தேவதூதர்களாக காட்டிவிடுகிறார்கள்...

இந்தக் கொடுமைகளை விட்டு எப்போது மீளப்போகிறோம்?

- ஆசிரியர்

# வெளிவிவகார அமைச்சின் பலவீனமே நாடு அபகீர்த்தியடைய காரணம்

## ரஜீவ எம்.பி. தெரிவிப்பு

வெளிவிவகார அமைச்சில் காணப்படும் பலவீனம் மற்றும் குறைபாடுகள் காரணமாக இலங்கை சர்வதேசத்திற்கு மத்தியில் அபகீர்த்திக்கு உள்ளாகியிருப்பதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு வெளிவிவகார அமைச்சு உரிய முறையில் பதிலளிக்கவில்லை.

சர்வதேசம் இலங்கை மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் எந்த தேவையும் வெளிவிவகார அமைச்சுக்கு இல்லை.

சட்டத்திற்கு அமையவே, அரசாங்கம் போரை முன்னெடுக்க முயற்சித்தது. எனினும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று சுட்டிக்காட்ட அரசாங்கம் தவறியுள்ளது.

ஐ.நா. அதிகாரிகள் சாட்சியாளர்களாக இருந்தனர். அமைச்சர் விமல் வீரவன்ஸ, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீது விமர்சனங்களை முன்வைத்தார்.

இதனால் பான் கீ மூன் கோபித்துக்கொண்டார். இலங்கையுடன் வேலை செய்த ஐ.நா அதிகாரிகளிடம் ஐ.நா.செயலாளரின் தருஸ்மன் குழு விசாரணைகளை நடத்தவில்லை.

அதிகாரபூர்வமாக எழுதி பதில்களை வழங்கியிருந்தால், பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. ஏன் அரசாங்கம் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பதில்லை?

அரசாங்கம் இது தொடர்பான பொறுப்பை எடுத்து கொள்வதில்லை. அரசாங்கம் சாட்சியங்களை முன்வைப்பதில்லை.

ஆனால், சிறு குழந்தைகளை போல், அரசாங்கம் வெறுமனே குற்றச்சாட்டுக்கள் தவறானவை, நாங்கள் பேசமாட்டோம் என்கிறது.

அதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சின் திறனை மேம்படுத்தும் தேவையும் அரசாங்கத்திற்கு இல்லை. வெளிவிவகார அமைச்சின் திறனானது வருடந்தோறும் குறைந்து வருகிறது.

இலங்கை முன்னோக்கி செல்ல வேண்டுமாயின் இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்த வேண்டும்.

இந்தியாவுடனான உறவுகளையும் சீர்குலைத்துக் கொண்டுள்ளனர் எனவும் ரஜீவ விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## சட்டவிரோதமாக கொண்டுசென்ற வெளிநாட்டுப் பணம் சிக்கியது

நாட்டிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுசெல்லப்படவிருந்த 60 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டுப் பணம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க டொலர், யுரோ மற்றும் இலங்கை ரூபா என்பன காணப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டிலிருந்து சாஜாவிற்கு பயணித்த ஒருவரிடம் இருந்தே, இந்தப் பணம் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுங்கப் பிரிவினரின் விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபருக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார் தெரிவித்தார்.

## வடக்கின் முக்கிய நகரங்கள் சர்வதேச தரத்தில் அபிவிருத்தி

வடக்கின் முக்கிய நகரங்களை சர்வதேச தரத்தில் அபிவிருத்தி செய்ய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷவின் கீழ் செயற்படும் நகர அபிவிருத்தி அதிகார சபை இதற்கான திட்டங்களை வகுத்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 20 மாடிகள் கொண்ட உயரமான கட்டடம் ஒன்றை அமைத்தல், அரச நிறுவனங்களின் சுற்றுச் சுவர்களை தகர்த்து திறந்த வெளிப் பூங்கா அமைத்தல், மட்டக்களப்பில் பாரிய கட்டடங்கள் உட்பட 16 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்; மன்னாரில் சர்வதேச மட்டத்திலான விளையாட்டரங்கு மற்றும் பசுமைப் பூங்கா அமைத்தல் என்பன போன்ற செயற்திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, பூநகரி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தனியார் முதலீட்டில் உயரமான கட்டடங்கள் எழுப்புதல், பேருந்து நிலையங்களை நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கின் கடற்கரையோரமாக பல இடங்களில் கடற்கரை பூங்காக்கள் அமைக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டங்கள் அனைத்தும் கோத்தாபய ராஜபக்ஷவின் நேரடி மேற்பார்வையில் நடைபெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விரிவான செய்தியொன்றை தினமிண பத்திரிகை வெளியிட்டுள்ளது.

## எயிட்ஸ் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளும் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எயிட்ஸ் அச்சுறுத்தலின் ஒரு கட்டமாக எயிட்ஸ் நோய் தொற்றிய ஐந்து கர்ப்பிணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கடுமையான மருத்துவப் போராட்டங்களின் பயனாக இவர்களில் நால்வர் எயிட்ஸ் தொற்று இல்லாத ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுத்துள்ளனர். ஒருவருக்கு பிறந்த குழந்தைக்கு மட்டும் எயிட்ஸ் தொற்றியுள்ளது.

இதனையடுத்து தற்போது நாடு தழுவிய ரீதியில் கர்ப்பிணிப் பெண்களுக்கான பராமரிப்பின் ஒரு கட்டமாக எயிட்ஸ் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான குருதிப் பரிசோதனை மேற்கொள்வதற்கான சாதனங்கள் சுகாதார அமைச்சினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப்பொறுத்தவரை ஏனைய நாடுகளைப்போன்று விலைமாதுகளின் மூலமாக எயிட்ஸ் நோய் பரவும் அபாயம் குறைவாகவே காணப்படுகின்றது. அதற்குப் பதிலாக ஆண்களின் மூலமாகவே எயிட்ஸ் நோய் அதிகளவில பரவிக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

## ஒரு இலட்சம் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அதனை வழங்கும் செயற்றிட்டம் துரித வழியில் இடம்பெற்று வருவதாக ஆட் பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னதாக அடையாளஅட்டை இல்லாத ஒரு இலட்சம் பேருக்கு அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடையாளஅட்டை இல்லாதவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் ஆட்பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம்

## - யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவிப்பு -



இன்றைய காலத்தில் மக்களுக்கு எது தேவைப்படுகின்றதோ அதைப் பெற்றுக் கொடுப்பதற்குத்தான் நாங்கள் உழைத்துவருகின்றோம். அதன் ஒரு அங்கமாகத்தான் 'எங்கள் வீட்டுத்தோட்டத்திலிருந்து எங்கள் மரக்கறிகள்' என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் உங்களுக்கு வழங்கப்படுகின்றது. என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளார்.

வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் தெல்லிப்பளை பகுதிக்கான உதவி வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பளை கமநலசேவை நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிக்கொள்ளும் நாள் இது. உங்களது வாழ்வில் வெளிச்சத்தை கொண்டுவருவதற்காக உழைத்துவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உழைப்பிற்கு கிடைத்துவரும் வெற்றி களின் தொடர்ச்சி இது. இத் திட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டாலும் வட மாகாணத்தை பொறுத்தளவில் அமைச்சரது அதீத செயற்பாடு களால்தான் அவற்றைப் பெற்றுக கொடுக்க முடிந்தது.

ஒருபகுதி மக்களுக்கு இது முதற் கட்டமாக வழங்கப்பட்டாலும் வறிய மக்கள் அனைவருக்கும் அமைச்சர் இந்த உதவியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வெறுமனே வாழ்வாதார உதவிகளை மட்டும் பெற்றுக் கொண்டிருந்தால் எமது இனத்தின் வாழ்வியல் மாற்ற மடையாது. கிடைக்கின்ற உதவிகளை பெற்றுக்கொள்வதுடன் எமது அரசியல் எதிர்காலத்தையும் சிந்தித்துப்பார்ப்பவர்களாக ஒவ்வொரு குடிமகனும் மாற்ற மடைய வேண்டும்.

எதையும் வேண்டாம் என்று விதண்டாவாதம் பேசிக் கொண்டிராது ,கிடைப்பவற்றை பெற்றுக்கொண்டு வாழ்வை மேம்படுத்தி எதிர்கால சந்ததியினராவது நிம்மதியான அமைதிச் சூழலில் வாழக்கூடிய நிலைமையை உருவாக்க பாடுபட வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில், தெல்லிப்பளை பிரதேச செயலர், தெல்லிப் பளை பிரதேச கால்நடை வைத்தியர் மற்றும் வலி. வடக்கு அமைப்பாளர் அன்பு, தீபன் ஆகியோருடன் முக்கிய அதிகாரிகள் பலரும பயணாளிகளும் கலந்து கொண்டனர்.

### பருத்தித்துறை - அக்கரைப்பற்று இன்றுமுதல் பேருந்துசேவை

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து அக்கரைப் பற்றுக்கான பேருந்து சேவை இன்று முதல் நடைபெறவுள்ளது. இதில் பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து பிற்பகல் 6.30 மணிக்கு ஆரம்பமாகி கொடிகாமம், வவுனியா, மட்டக்களப்பு ஊடாக அக்கரைப் பற்று வரைக்கும் சென்று பின்னா அக்கரைப்பற்றிலிருந்து பி.ப 9 மணிக்கு மீண்டும் புறப்படும்

இச் சேவையானது மட்டக்களப்பு, வவுனியா, கொடிகாமம், ஊடாக பருத்தித்துறை வரைக்கும் சேவையாற்றவுள்ளதாக இ.போ.ச வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# நெடுந்தூர பேருந்து சேவை ஊழியர்களுக்கு சீருடைகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தூர பேருந்து சேவை ஊழியர்களுக்கான அடையாள அட்டை மற்றும் 5 பேருக்கு இலகு கடன்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட தனியார் நெடுந்தூர சேவை சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் நடுந்தூர சேவை ஊழியர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டன. நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பேருந்து சாரதிகளுக்கு இலகு கடன்களும் வழங்கப்பட்டன. அந்த வகையில், 4 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், ஒருவருக்கு 1 லட்சம் ரூபாவும் கடன் தொகை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்குச் செல்லும் நெடுந்தூர சேவை ஊழியர்களை பொது மக்கள் அடையாளம் காணக் கூடிய வகையிலேயே, ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. (25)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர்.க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராசா, கௌரவவிருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், வாழ்த்துரையை ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர் திருமதி.றெஜீனா, இருதயநாதன், இணுவில் இரசிகப்பிரியா சபாகலைவளர்ச்சி மையத்தலைவர் இணுவையூர் வி.கே.குகானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# சமூகசேவை திணைக்களத்தினால் சுயதொழில் கொடுப்பனவு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் சுயதொழில் வழங்கவென 4 பேருக்கு தலா 7500 ரூபா வீதம் முதற்கட்ட நிதியை அனுப்பி வைத்துள்ளது.

. வியாபாரம்,கோழி வளர்ப்பு, விவசாயம், தோட்டம் ஆகிய சுயதொழில்களைச் செய்யவே இவ்வாறு நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் செய்ய ஆரம்பித்து அது முன்னேற்றகரமான நிலையை அடைந்ததும் இரணடாம் கட்டக் கொடுப்பனவு தலா 7500 ரூபா வீதம் வழங்கப்படும்.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் வறிய நிலையிலுள்ளவர்களுக்கே இவ்விதமாக சுயதொழில் உதவிகள் வழங்கப்படுகின்றன.

அதே வேளை எதிர்பாராத தீ விபத்து,கடுங்காற்று, கடும்மழை காரணமாக வீடுகள் பாதிப்படைந்த 5 பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கவும் நிதி அனுப்பி வைக்கபட்டுள்ளது.

முதற்கட்ட கொடுப்பனவாக 4 பேருக்கு தலா 10,000 ரூபாவும், இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 10,000 ரூபாவும் வழங்குவதற்குரிய நிதியே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (90)

# பதக்கங்கள் வழங்கி மாணவர்கள் கௌரவிப்பு

(அச்சுவேலி)

2014 ஆம் ஆண்டில் தரம் 6, 7 மாணவர்களுக்க்ரக நடாத்தப்பட்ட ஒலிம்பியாட் போட்டிகளின் போது வலய மட்டத்தில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்கல்வி வலய மாணவர்கள் யாழ்ப்பாண வலய விஞ்ஞான அலகினால் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களாகிய ந.சிவமைந்தன், தே.அபிராம், உ.வஜிரத், சி.திலக்சன் ஆகிய நால்வருமே யாழ்ப்பாணம். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றின் போது பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இம்மாணவர்களில் ந.சிவமைந்தன் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருப்பதுடன் சர்வேதச ரீதியில் நடைபெறும் ஒலிம்பியாட் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (03)

# அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சகவாழ்வு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நவாலி சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் இன்று அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலக அதிகாரிகளின் உதவியுடன் அடையாள அட்டை. இல்லாத அனைவருக்கும் அடையாளஅட்டை வழங்கப்படவுள்ளது.

மேலும் மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை கன்னாபுரத்தில் தீபாவளி சிறப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை போதைப் பொருள் மது ஒழிப்பு நடவடிக்கையாக பதாகைகளை ஏந்திய பிரசார நடவடிக்கையும் இடம் பெறவுள்ளதுடன் இந் நிகழ்வில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் கலந்து கொள்ளவுள்ளார். (105)







யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி முன்னாள் அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் மற்றும் நான்கு ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர் உரையாற்றுவதையும்,முன்னாள் அதிபர் முபாரக் மற்றும் ஆசிரியருக்கு நினைவுப்பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (105)

# மீனவர்கள் மீதான தாக்குதல் அமைச்சர் ராஜித கவலை



(கொழும்பு)

கடற்றொழில் அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கவலை தெரிவிப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனம் ஒன்றின் சூழலில் மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் வருந்துவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி மீனவர்கள் சிலர், கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு கடற்றொழில் அமைச்சின் முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதே அமைச்சின் வளாகத்தில் இருந்த சிலரால் மீனவர்கள் மீது கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பின்னர் இருதரப்பினருக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டதோடு, சிலர் காயமடைந்தனர்.

இந்நிலையில் அமைச்சின் அனுமதிபெற்ற சிலரே இத்தாக்குதலை நடாத்தியதாக, மீனவர்கள் குற்றம்சாட்டினர்.

இதனை மறுத்துள்ள கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன, அரசியல் காரணங்களுக்காகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்

# பிரபாகரனை கொலை செய்வதற்கு மாத்தையாவிற்கு ஆயுதமளித்த ஐ.தே.க.

## உண்மையை ஒப்புக்கொள்ளும் சஜித்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொலை செய்வதற்கு இரண்டாம் நிலைத் தலைவர் மாத்தையாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதம் வழங்கியது என கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் சூரியவெளரன்முதுவெள என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக குறிப்பிட்டுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவிற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டது.

இந்த முரண்பாட்டைப் பயன்படுத்தி பிரபாகரனை கொலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தீட்டம தீட்டியது. இதற்காக மாத்தையாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கியது.



மாத்தையாவின் ஊடாக பிரபாகரனை கொலை செய்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டமாக அமைந்திருந்தது.

இந்தத் திட்டம் வெற்றியளித்திருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும். எனினும் துரதிஷ்டவசமாக இந்த திட்டம் தோல்வியடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்தையாவை கொலை செய்தனர். போரின் போது வகுக்கப்படும் அனைத்து திட்டங்களும் வெற்றியளிப்பதில்லை.

போர்த் தந்திரோபாயங்கள் வெற்றியளித்தால் மக்கள் பாராட்டுவார்கள்.

தோல்வியடைந்தால் எல்லோருடைய விமர்சனங்களையும் எதிர்நோக்க நேரிடும். இதுவே உலக நியதி என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி மகிந்தவிற்கு சவால்கள் எதுவுமில்லை

## – என்கிறார் அமைச்சர் ஹேரத் –

(கொழும்பு)

நாட்டில் யுத்த சூழ்நிலையையும் பயங்கரவாதத்தையும் ஒழித்து அபிவிருத்தி யுகம் ஒன்றைத் தொடங்கியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எவ்வித சவால்களும் இல்லை என அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு




தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர்

நாட்டில் துரித காலகட்டமொன்றில் பாரிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு பணிகளை முன்னெடுத்த பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டு.

தேசிய மட்டத்திலான பாதை அபிவிருத்தி வலைப்பின்னல் தொலைத் தொடர்பு வசதிகள் உட்பட நவீன கல்வித்திட்டத்துக்கும் அவர் வழி சமைத்துள்ளார்.

குறுகிய காலத்தில் வேறெந்த தலைவர்களும் செய்யாத சேவைகளை முன்னெடுத்துள்ள ஜனாதிபதியின் செயற்பாடு காரணமாகவே தேர்தல்களில் ஆளும் கட்சி வெற்றி பெற்று வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்

# அடுத்த வருடத்திற்கான செலவு பாரியளவாக அதிகரிக்கும்?



அரசாங்கம் இன்று சமர்ப்பிக்கவுள்ள அடுத்த வருடத்திற்கான புதிய வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த வருமானம் 171300 கோடி ரூபா எனவும், அடுத்த வருடத்துக்காக மதிப்பிடப்படும் செலவுகள் 350300 கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வரவை மிஞ்சிய செலவாக 179000 கோடி ரூபா காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

புதிய வரவு -செலவுத் திட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இன்று சுபநேரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஒக்ரோபர் 25 முதல் நவம்பர் முதலாம் திகதி வரை முதலாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. முதலாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் முதலாம் திகதி மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

இதேவேளை, நவம்பர் 3 ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் ஆரம்பமாகும். இதில் சிரேஷ்ட அமைச்சுக்கள் (விசேட அலுவல்களுக்கான செயலகம்) அடங்கலாக 23 அமைச்சுகள் மீதான விவாதம் ஒரே தினத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வரவு-செலவுத் திட்ட விவாதங்கள் தினமும் 8 மணி நேரம் நடைபெறவிருப்பதோடு ஒவ்வொரு செலவுத் தலைப்பிற்கும் 2 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நவம்பர் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# புலிகளின் செயற்பாட்டாளர்களுக்கு விசா வழங்கும் கனடா, சுவிஸ்

## விசாரணைகளை ஆரம்பித்துள்ளது அரசு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் செயறபாட்டாளர்களுக்கு கனடா மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகள் தடையின்றி விசா வழங்கும் விவகாரம் குறித்து அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் இருக்கும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அவர்களின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் அண்மைக்காலமாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அவர்களுக்கு கனடா மற்றும் சுவிட்சர்லாந்துக்கான விசா இலகுவாக கிடைப்பதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினரின் முறைப்பாட்டை அடுத்து அரசாங்கம் இதற்கெதிரான ராஜதந்திர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. மேலும் இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும் தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் திவயின பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பௌத்த-இந்து நட்புறவு மாதம் தீபாவளி தினத்தில் ஆரம்பம்



(கொழும்பு)

பொதுபலசேனா மற்றும் அகில இலங்கை இந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பௌத்த இந்து நட்புறவு மாதம் தீபாவளி தினத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை நெதிமால, தெஹிவளை பிரதேசத்தில அமைந் துள்ள பௌத்த கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்து முறைப்படியான பூஜை வழிபாடுகள் தெஹிவளை எண்டசன் வீதியில் அமைந்துள்ள இந்துக் கோவிலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொது பல சேனா நிறைவேற்று அதி காரி திழந்த விதானகே, தலைவர் கிராம விமல ஜோதி தேரர், பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் மற்றும் அகில இலங்கை இந்து சம்மேளனத்தின் தலைவர் எம். அருள்காந்த் உட்பட அந்த அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்

# தேசிய சிறுவர் ஆய்வு நூலகத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வளாகத்தில் அமைந்துள்ள சிறுவர் பாதுகாப்பு தொடர்பான வெளியீடுகள் வைக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆய்வு நூலகத்தை விஸ்தரிப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்க நிறுவனங்கள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களினால் செய்யப்பட்ட பல்வேறு ஆய்வுகள் இந்நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள உற்பத்திகளையும் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்குமாறு அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலதிக தகவல்களை 0110277891 என்ற தொலை பேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறான செயற்பாடுகளினூடாக நாட்டின் சிறுவர்களைப் பாதுகாப்பதே சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நோக்கமாகும்.

# நவம்பரில் வருகைதரும் பெலாரஸ் பிரதிநிதிகள்

(கொழும்பு)

பெலாரஸ் நாட்டின் தேசிய சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் நவம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பெலாரஸ் நாடாளுமன்றத்தின் தலைவர் விளாடிமிர் அன்ட்ரெய் சென்கோ தலைமையிலான குழுவே நவம்பர் 17முதல் 21 ஆம் திகதிவரை இலங்கைக்கு வரவுள்ளது.



இதன்போது இலங்கையின் நிர்வாக முறை மற்றும் நாடாளுமன்ற அமர்வுகளை அந்த பிரதிநிதிகள் குழு பார்வையிடவுள்ளது.

அத்துடன் பல்வேறு தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளது.

# முல்லை.மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

## - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு -



முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும், உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் உரிய காலத்தில் முன்னெடுக்கப்படுமென அமைச்சர டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் மாவட்ட ஊடகவியலாளர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுனாமி மற்றும் யுத்தப் பாதிப்புக்களிலிருந்து மக்களை பொருளாதாரத்தாலும் அந்தந்தப் பகுதிகளை அபிவிருத்தியாலும் கட்டியெழுப்ப வேண்டியது முக்கிய கடப்பாடாகவுள்ளது.

வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணத்தின் அபிவிருத்தி என்பது தென்னிலங்கையிலிருந்து வேறுபட்டதாகத்தான் இருக்க வேண்டுமென்பதே எனது வலியுறுத்தல் ஆகும்.

குறிப்பாக உள்ளூர் உற்பத்திகளையும் தொழிற்துறைகளையும் மேம்படுத்துவதன் ஊடாக இப்பகுதியின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

விசேடமாக இம்மாவட்டத்தில் குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் பருவகாலங்களில் கிடைக்கப் பெறுகின்ற பழ வகைகளை உரியமுறையில் பதப்படுத்தி அதனூடாக துறைசார்ந்தவர்களது பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

இதனிடையே நெடுங்கேணியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த ஆறு மாத காலமாக இயங்காமல் இருப்பதாகவும் இதேபோன்று முத்தையன்கட்டுப் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையத்தில் போதியளவு எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்களும் விவசாயிகளும் பெரும அவலத்திற்கு உட்படுவதாகவும் இதுவிடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் ஊடகவியலாளர்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் மக்களினதும் விவசாயிகளினதும் நலன்களை பாதுகாக்கும பொருட்டு உரிய தீர்வு விரைவில் பெற்றுத்தரப்படுமென உறுதியளித்தார்.

# தனியார் பேருந்து மோதி ஆட்டோ சாரதி படுகாயம்



முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில், ஆட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் கடந்த செவவாய்க்கிழமை மதியம் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் ஆட்டோ சாரதி படுகாயமடைந்துள்ளதுடன், ஆட்டோவும் படுசேதமடைந்துள்ளது.

பேருந்து சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விபத்து சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# சத்திரசிகிச்சை ஆண்கள் விடுதி தெல்லிப்பளை வைத்தியசாலையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஆண்களுக்கானதனியான சத்திர சிகிச்சை ஆண்கள் விடுதியொன்று கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பதில் வைத்திய அத்தியட்சகர் வை.திவாகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ஜெயந்தன் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாகக் குறித்த விடுதியைத் திறந்து வைத்தார்.

குறித்த விடுதி திறந்து வைக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பதில் வைத்திய அத்தியட்சகர் எமது வைத்தியசாலையில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆண்,பெண் சத்திரசிகிச்சை விடுதிகள் இருந்தன. இடப் பெயர்வுக்குப் பின்னர் இப் பிரிவில் காணப்பட்ட வைத்தியர்கள்,ஆண் பெண் தாதியர் கள், சிற்றூழியர்கள் பற்றாக் குறை காரணமாக மூடப்பட்டி ருந்தது.

ஆனால் அண்மைக்காலமாக எமது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த காரணத்தால் வைத்தியசாலை நிர்வாகத்தின் அதீத முயற்சியினால் இவ்விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும் .பெண்களுக்கான தனியான விடுதி இதுவரை இயங்காத நிலையிலேயே காணப்படுகிறது என்றார்.

இந் நிகழ்வில் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நோயாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேற்படி சத்திர சிகிச்சை விடுதி திறக்கப்பட்டுள்ளமையால் பல நோயாளர்களும் நன்மையடைந்துள்ளனர். என்பது குறிப்பிடதக்கது. (48)

# அவசரகூட்டம்

(ஏழாலை)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தின் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பான அவசரகூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கலந்து கொள்வதற்காக பெற்றோர்கள், கிராமஅலுவலர்கள், வலயக்கல்வி அதிகாரிகள் ஆகியோக்கு அழைப்பு விடுத்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

# கட்டைக்காடு கடற்கரை சந்தியில் வெளிச்ச வீடு திறந்து வைப்பு



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் கட்டைக்காட்டு சென். மேரிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கு அமைய இலங்கை இராணுவத்தின் 55ஆவது படைப்பிரிவினரால் கட்டைக்காட்டில் அமைக்கப்பட்ட வெளிச்ச வீடு நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில்.பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் அ.ஜோசேப் எட்வேட் தலைமையில் கட்டைக்காட்டு கடற்கரை சந்தியில் இடம்பெற்றது.

55ஆவது படை பிரிவின் அதிகாரியால் ஆளியை அழுத்தி வெளிச்சவீடு பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தாளையடி உதவி பங்குத்தந்தை சதீஷ்குமார், வடமராட்சி கிழக்கு சமாச செயலாளர் எ.பெ. அன்ரனி கட்டைக்காட்டு கிராமிய. அபிவிருத்திச் சங்கத்தலைவர் யா.நிமலன் விமலதாஸ் அவர்களோடு 55ஆவது படைப்பிரிவின் அதிகாரிகளும் நூற்றுக்கு மேற்பட்ட கிராம மக்களும் கலந்து கொண்டனர். (40)

# முரசின் இன்றைய பலன்



(24.10.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 07 ஆம் திகதி.
சித்தம் /பிரதமை.
சுவாதி நட்சத்திரம் பி.இ. 05.58 வரை. பின் விசாகம்.
இராகு காலம் 10.32 - 12.02 வரை. சுபநேரம் 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தேங்கிய பொருட்களை கழிவின் மூலம் விற்பனை செய்ய நேரிடும். சகபாடிகளுடன்ஒன்றிணைந்து பணியைத்திறம்படசெய்தல் நன்று. |
| ரிஷபம் | தீமைகள் விலக தெட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடு செய்க. திடீர மாற்றத்தால் எதிர்பாராது ஏற்றம் பெறுவீர்கள். |
| மிதுனம் | அரசுப்பணியில் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைத்தல். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தல். |
| கடகம் | மிகச்சுலபமாக எடுத்த செயல் வெற்றிக்கனியை தருதல். கொடுக்கல் வாங்கல் சுமூகமாக ஒழுங்கமைத்தல். |
| சிம்மம் | பட்ட கடனை அடைக்க அடகு வைத்தல்.நம்பிக்கைக்குத் துரோகம் செய்த ஊழியரை எண்ணி கவலையடைதல். |
| கன்னி | வேலைப்பளுவில் மூழ்கிக் கிடந்தால் தேக நலன் பாதிக்கப்படல். பரீட்சை சம்பந்தமான வெற்றிச் செய்தி வந்தடைதல். |
| துலாம் | சொத்துப்பங்கீட்டால் பெற்றோர் பிள்ளைகளுக் கிடையே முரண்பாடு ஏற்படல். |
| விருச்சிகம் | வெளியூர் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் இனிய செய்தியைத்தருதல். பெற்றோரின் நோய் நிலை கருதி விவாகத்தைச்சிறிது காலம் ஒத்தி வைத்தல். |
| தனுசு | ஆற அமரச்சிந்திப்பது நன்மை தரும். தொழில் முன்னேற்றத்தில் திடீர் திருப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. |
| மகரம் | தேக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் தொழிலில் மனக்குழப்பம் நீங்கிவிடல். |
| கும்பம் | பொருட்களை கொள்வனவு செய்ய திடீர் பிரயாணம் செய்ய நேரிடும். குடும்ப சகிதம தெய்வதலம் செல்லமுற்படல் |
| மீனம் | கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசிச் சமாளித்தல். எவருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். |

# பரா ஆசிய விளையாட்டு இலங்கைக்கு தங்கப் பதக்கம்



பரா ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

ஆடவருக்கான 200 டி-42 மீற்றர் ஓட்டப் போட்டியில் அனில் பிரசன்ன ஜெயலத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.


குறித்த தூரத்தை 25.87 செக்கன்களில் இவர் கடந்தார். இந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை இலங்கையின் சார்பாக உபுல் இந்திக பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தங்கப் பதக்கம் வென்ற அனில் பிரசன்ன ஜெயலத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன் நாடு திரும்பும் வேளை ஜெயலத்திற்கு சிறப்பான வரவேற்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் டி.எம். டில்சானின் ஆடம்பர விடுதி டி பெவிலியன் இன் கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ் ஆடம்பர விடுதி ஷிரப்பேர்ட் அவனியூ கிருலப்பனையில் அமைந்துள்ளது.

## புதிய சாதனை




27 ஒரு நாள் போட்டிகளில் அதிக (50) பேரை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் காப்பாளர் என்ற புதிய சாதனையை தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கொக் படைத்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியின் போது இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. இப்போட்டியில் ஐந்து பிடியெடுப்பு, ஒரு ஸ்டம்பிங் என அசத்திய குயின்டன் ஆறு பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். 27ஆவது ஒரு நாள் போட்டியில் பங்குபற்றிய இவர் குறைந்த போட்டிகளில் இச்சாதனையைப் புரிந்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் ரிட்லி ஜேக்கப்ஸ், இங்கிலாந்தின் ஜெரைண்ட் ஜோன்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் ஆகியோர் 30 ஒருநாள் போட்டிகளிலேயே 50 பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளனர்.

## இலங்கை – இந்திய அணிகள் அறிவிப்பு





(கொழும்பு)

இந்திய அணிக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் மோதவுள்ள இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சண்டிமல், திரிமன்ன ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நவம்பரில் இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டம் நவம்பர் 2ஆம்திகதி கட்டாக்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டது. இதில் சரியான உடற்தகுதி இல்லாத போதும், சிரேஷ்ட வீரர் சங்கக்கார சேர்க்கப்பட்டுள்ளார். ஒருவேளை சங்கக்கார அணியில் இடம் பெறவில்லை எனில், விக்கெட் காப்பாளர் நிரோஷன் களமிறக்கப்படலாம்.

அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஹேராத்துக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. இவருக்குப் பதில் ரந்திவ், மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தவிர, திரிமன்னே, சண்டிமல் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

அணி விபரம்: மத்தியூஸ் (கப்டன்), தரங்க, டில்சான், சங்கக்கார, ஜெயவர்த்தன, குசல் பெரேரா, திசார பெரேரா, பிரியஞ்சன், நிரோஷன், குலசேகரா, தம்மிக பிரசாத், கமகே, சதுரங்க டி சில்வா, பிரசன்ன, ரந்திவ்.

இதேவேளை, இலங்கை அணிக்கெதிரான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள முதல் மூன்று போட்டிகளுக்கான அணியின் கப்டனாக ஹோலி நியமிக்கப்பட்டுள்ளதுடன் டோனிக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அணி வீரர்கள் விபரம்: ஹோலி (கப்டன்), தவான், ரகானே, சுரேஷ் ரெய்னா, அம்பாதி ராயுடு, விர்திமான் சகா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, மொகமட் சமி, உமேஷ் யாதவ், இசாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, முரளி விஜய், வருண் ஆரோன், அக்சார் பட்டேல்.

## அரவிந்த வீட்டில் 5.1 மில்லியன் கொள்ளை

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் துடுப்பாட்ட வீரருமான அரவிந்த டி சில்வாவின் வீட்டில், 5.1 மில்லியன் ரூபாய் திருடப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.


கொழும்பு, தேர்ஸ்டன் வீதியிலுள்ள தனது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பெட்டகத்திலிருந்த 5.1 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

விடுமுறையைக் கழிப்பதற்காக தன்னுடைய மனைவியுடன் வெளிநாடொன்றுக்கு சென்றிருந்த அரவிந்த டி சில்வா, கடந்த செவ்வாய்க்கிழமை வீடு திரும்பியுள்ளார்.

இதன்போதே வீட்டிலிருந்த பாதுகாப்பு பெட்டகம் திறந்திருந்ததுடன் அதிலிருந்த பணமும் காணாமற் போயுள்ளமை தெரியவந்தது என்றும் அவர், தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வீட்டில் பணியாற்றி வந்த 8 ஊழியர்களிட மும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக கொள்ளுப் பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

## மலேஷியாவிற்கு தொடரும் அவமானம்
## முதல் நிலை வீரரும் ஊக்கமருந்து பாவனை



(கோலாலம்பூர்)

உலகின் முதல் நிலை பட்மின்ரன் வீரர் மலேசியாவின் லீ சாங் வெய், ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார்.

மலேசிய பட்மின்ரன் வீரர் லீ சாங் வெய் (வயது-31). சர்வதேச தரவரிசையில் முதல் இடத்திலுள்ளார். சமீபத்திய (இன்ச்சான்) ஆசிய விளையாட்டில் வெண்கலம் வென்றார். இந்நிலையில், இவருக்கு நடத்தப்பட்ட சோதனையில், இவர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியமை தெரியவந்தது.

இது குறித்து மலேசிய பத்திரிகையில் வெளியான செய்தியில், கடந்த ஓகஸ்ட் (25-31) மாதத்தில் டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகனில் உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் நடைபெற்றது. அப்போது, லீ சாங்கிடம் சோதனை நடந்தது. இதில், லீ சாங் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியமை உறுதியானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய விளையாட்டுத்துறை அமைச்சர் காய்ரி ஜமாலுதீன் வெளியிட்ட அறிக்கையில், சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பு, கடந்த 1ஆம் திகதி, எங்களது தேசிய ஊக்கமருந்து தடுப்பு மையத்திற்கு கடிதம் அனுப்பியது. இதில் இடம் பெற்றுள்ள வீரருக்கு, இரண்டாவது சோதனை நடாத்தப்பட்டது. இதன் முடிவு விரைவில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய இன்ச்சான் ஆசிய விளையாட்டுப் போட்டியில், மலேசிய வீரராங்கனை டாய் சியு செயுன் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார். இதனால், இவரது தங்கப்பதக்கம் பறிபோனது. தற்போது மற்றொரு வீரர் சிக்கியயுள்ளமை மலேசியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வென்றது பார்சிலோனா

அஜாக்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் கால்பந்து போர்ட்டியில் மெஸ்சி, நெய்மர் தலா ஒரு கோல் அடிக்க பார்சிலோனா அணி வெற்றி பெற்றது..

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. பார்சிலோனாவில் நடைபெற்ற இதன் லீக் போட்டியில் அஜாக்ஸ், பார்சிலோனா அணிகள் மோதின. போட்டியின் 7ஆவது நிமிடத்தில் பார்சிலோனா இளம் வீரர் நெய்மர் ஒரு கோல் அடித்தார். நட்சத்திர வீரர் மெஸ்சி 24ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா முதல் பாதியில் 2-0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் (88ஆவது நிமிடம்) அஜாக்ஸ் அணி சார்பில் எல் காஜி ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா அணியின் சாண்ட்ரோ (90ஆவது நிமிடம்) கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முடிவில், பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## முதலாவது பாகிஸ்தானியர்



டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அனைத்து அணிகளுக்கும் எதிராக சதம் அடித்த முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை யுனிஸ்கான் பெற்றுக்கொண்டார்.

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஒரு நாள் தொடரில் கழற்றிவிடப்பட்ட யுனிஸ்கான சிறப்பான முறையில் ஆடி சதமடித்து அசத்தினார். 223 பந்துகளை எதிர்கொண்ட யுனிஸ்கான் 10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 106 ஓட்டங்களைப் பெற்றார். இச்சதத்துடன் டெஸ்ட் அரங்கில் யுனிஸ்கான் பதிவு செய்த 25ஆவது சதமாக இது அமைந்தது. அத்துடன் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அனைத்து அணிகளுக்கும் எதிராக சதம் அடித்த முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பைப் பெற்றதுடன் அதிக சதம் விளாசிய பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பையும் இன்சமாம் உல் ஹக்குடன் பகிர்ந்துகொண்டார்.

# 40ஆவது தேசிய விளையாட்டு விழா அநுராதபுரத்தில் நாளை ஆரம்பம்

(அநுராதபுரம்)

40 ஆவது தேசிய விளையாட்டு விழா நாளை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை அநுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண விளையாட்டுத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இதில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஒன்பது மாகாண வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

இப்போட்டியில் தனி, குழுப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கம் உட்பட பணப்பரிசுகளும் வழங்கப் படவுள்ளன. தனிப்போட்டியில் முதலிடம் பெறுபவர்களுக்கு 7500 ரூபாவும் இரண்டாமிடம் பெறுபவருக்கு 5000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 3000 ரூபாவும் வங்கப்படும். அத்துடன் குழுப்போட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு 3 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 2000 ரூபாவும் மூன்றாமிடம் பெறும் அணிக்கு 1000 ரூபாவும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற அனைவருக்கும் மொத்தமாக 44,67,500 ரூபா பணப் பரிசு வழங்கப்படும். முதலாவது நாளில் 10ஆயிரம் மீற்றர் ஆண்களுக்கான இறுதிப்போட்டியும் 200 மீற்றர், ஆண்கள் பெண்கள் தகுதிகாண் போட்டியும் நடைபெறவுள்ளன.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கம தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமர் தி.மு. ஜயரத்ன கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் ஒன்பது மாகாணங்களின் விளையாட்டு அமைச்சர்கள் கலந்து கொண்டு அந்தந்த மாகாணங்களின் கொடிகளை ஏற்றிவைப்பர்.

கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை கால்பந்து

# யாழ். பல்கலை அணி சம்பியன்



சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை விளையாட்டுப் பிரிவினரால் பல்கலைக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். பல் கலைக் கழகம் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அகில இலங்கையின் 12 பல்கலைக்கழகங்கள் பங்கு கொண்ட இச்சுற்றுப் போட்டியில் ரன்னர்ஸ் அப் ஸ்தானத்தை கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை அணியும் இரண்டாவது ரன்னர்ஸ் அப் ஸ்தானத்தை தென்கிழக்குப் பல்கலைக் கழகமும் பெற்றுக் கொண்டன.

கொத்தலாவல பாதுகாப்பு சர்வகலாசாலை துணை வேந்தர் மேஜர் ஜெனரல் எம்.பி. பீரிஸ், விளையாட்டு சபைத் தலைவர் பிரிகேடியர் ஏ.எல்.டி.எம். குணசேகர ஆகியோர் விருது வழங்கி கௌரவித்தனர்.

# பாண்டியன்குளம் ம.வி. மைதான மீள் புனரமைப்பு திட்ட அறிக்கை கோரும் அமைச்சர் டக்ளஸ்



(பாண்டியன்குளம்)

பாண்டியன்குளம் மகாவித்தியாலய மைதானத்தை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை மீள் புனரமைப்பு செய்வதற்கான திட்ட அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

கடந்த 20ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கமநல சேவை நிலையம் மற்றும் பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது பாண்டியன்குளம் மகாவித்தியாலய மைதானத்தை பார்வையிட்ட அமைச்சர் மைதானத்தை மீள்புனரமைப்புச் செய்வதற்கான திட்ட அறிக்கையை தனக்குச் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இப்பாடசாலையின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2011 ஆம் ஆண்டு மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக ஒன்றரை இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று பிரிவுகளில் யாழ். மத்தி வெற்றி

விளையாட்டு செய்திகள்

நட்புறவு கால்பந்துப் போட்டியில் மூன்று பிரிவுகளில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் தற்போது நட்புறவுக் கால்பந்துப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டிகள் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இதில் 14, 16, 18, 21 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலிரு கோலைகளைப் போட்டு முன்னிலை பெற்ற யாழ் மத்திய கல்லூரி அணி பிற்பாதி ஆட்டத்தின் இறுதி நேரத்தில் மேலும் இரு கோலைப் போட்டது. இறுதியில் 4-0 என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

எனினும் 21 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆக்ரோஷமாக செயற்பட்டு இரு கோல்களை அடுத்தடுத்துப் போட்டுக் கொண்டது. இதற்குப் பதில் கோல் அடிக்கும் முயற்சியில் இறுதி வரை போராடிய யாழ். மத்திய கல்லூரிக்கு பலன் கிடைக்கவில்லை. நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் க்ணக்கில் வெற்றிபெற்றது. (93)

# 2ஆவது ஒரு நாள் இன்று

(ஹமில்டன்)

தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெறவுள்ளது.

முன்னதாகவே, நடைபெற்ற முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது. இந்நிலையில் தொடரைத் தீர்மானிக்கும் தீர்க்கமான போட்டியாக இது அமையவுள்ளதாகவும் இரு அணிகளும் தமது முழுப் பலத்தையும் வெளிப்படுத்தி வெற்றிக்குப் போராடும் என கிரிக்கெட் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி முதலிடத்தைப்பிடித்துக் கொண்டது. இதில் இரண்டாம், மூன்றாமிடங்களை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அணிகள் பிடித்துக் கொண்டன. முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர்களுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராசா, பொறுப்பாசிரியர்கள், அதிபர்களுடன் நிற்பதைக் காணலாம்.

# வடக்கில் ஜனாதிபதியின் உதவி வழங்கும் நிகழ்வுகள் - ஓர் நோக்கு

- சாலையூரான் -

பாரபட்சமான அபிவிருத்தியை தமிழ் சூழலில் அரசு முன்னெடுத்து வருவதாக தமிழ் கூட்டமைப்பும் வடமாகாண சபை நிர்வாகமும் தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில் ஜனாதிபதியின் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வுகள் இம்முறை வித்தியாசமான ஒரு பதிவை தமிழ் சூழலில் ஏற்படுத்தியுள்ளன.

மக்களின் காணிகளில் இராணுவம் குடியிருக்க முனைவதாகவும் இதனால் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாதிருப்பதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கும் நிலையில் ஆயிரக்கணக்கானவர்களின் காணி உரிமைப் பிரச்சினைக்கு ஒரே தடவையில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

போர் நடைபெற்ற இந்த மூன்று தசாப்த காலப் பகுதியில் பெரும் தமிழ் நிலச்சுவாந்தர்களின் காணிகளில் பரம்பரையாக குடியிருந்த மக்களுக்கு தமக்கான காணி உரிமங்களை பெற்றுக் கொள்வதென்பது எட்டாக்கனியாக, தீராத ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது.

வடக்கு மாகாண சபைக்கு காணி பொலிஸ் அதிகாரத்தை வலியுறுத்தி நிற்கும் தமிழ் கூட்டமைப்பினர், பல ஆண்டுகளாக சொந்தமாக காணித்துண்டொன்றை பெறமுடியாது வேறொருவரின் காணிகளில் வாழ்ந்துவரும் பல ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்களின் நிலை பற்றி இதுவரை வாய் திறக்கவில்லை என்பதையும் இங்கே குறித்துக்கொள்ள வேண்டும்.

நிற்க, பல்வேறு காரணங்களுக்காக இன்று காணி உரிமம் கோரி நிற்பவர்களில் யாரை எந்த அடிப்படையில் காணி உரிமம் வழங்கலுக்காக முன்னுரிமைப்படுத்த முடியும் என்பதை இந்த வடமாகாண சபை நிர்வாகத்துக்கு அறிவிக்க எப்போதாவது முடிந்ததா?

சரி இந்த 21ஆயிரம் காணி உரிமங்களையும் வழங்குவதற்காக தமிழ் கூட்டமைப்பிடம் கொடுத்திருந்தால் இந்தக் காணிகளை எதன் அடிப்படையில் வழங்கப் போகிறோம் என்கிற குறைந்தபட்ச முன்னேற்பாட்டை யாவது முறையாக வகை தெரிந்து அறிவிக்க இவர்களிடம் ஏற்பாடு இருக்கிறதா?



உண்மை என்ன வென்றால் இந்த அரசிடமிருந்து மக்கள் எதையுமே பெற்றுவிடக் கூடாதென்பதை இலட்சிய மாகக் கொண்டிருக்கும் தமிழ் தேசியத்துக்கு சற்றும் எதிர்பார்த்திராத ஜனாதிபதியின் இந்த அறிவிப்புகள் அதிர்ச்சி தருவனவாக அமைந்துவிட்டன.

மோட்டார் சைக்கிள்கள் அனைத்து திணைக்களங்களிலுமிருந்து வெளிக்கள உத்தியோகத்தர்களின் பணிகளை இலகுபடுத்தவென 50ஆயிரம் ரூபா சலுகை விலையில் வழங்கவென அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவற்றை வெளிக்கள உத்தியோகத்தர்கள் வாங்க ஆரம்பித்ததில் இருந்தே மஹிந்த அரச உத்தியோகத்தர்களுக்கு சைக்கிள் வியாபாரம் செய்ய வந்துவிட்டார் என்ற செய்தியோடு இந்த கைசக்கிள்களுக்கான முழுக்கட்டணத்தையும் இந்த உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டும் என்கிற பொய்யான செய்தியும் கூடவே தமிழ் அதிகாரிகள், ஊடகத்தினர் மத்தியிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது.

யாரை எந்தப் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும் யாருக்கு பதவி உயர்வை வழங்க வேண்டும் என்பதையெல்லாம் கல்வித்தகைமைக்கு அப்பால் சமூகநிலை, பிரதேசம் சார்ந்து காய்நகர்த்தும் ஆதிக்க மேன்நிலைத் தமிழ் அரச நிர்வாகத்துக்கு"

தங்களது எந்த ஆலோசனையும் பெறப்படாமலேயே இந்த மோட்டார் சைக்கிள் விநியோகத்துக்காக ஆயிரக்கணக்கில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேர்வாகியிருப்பது அடக்க முடியாத ஆற்றாமைப்பிரச்சினையாகி இருக்கிறது.

கூடவே, தமிழ் கூட்டமைப்பை வெளிப்படையாக ஆதரித்த உத்தியோகத்தர்களுக்கும் கட்சி பேதம் பாராது இந்த சைக்கிள் விநியோகத்தை அரசு அனுமதித்திருப்பது தமிழ் கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை எதிர்பார்க்க முடியாத ஒரு நிகழ்வாகும்.

இனப்பிரச்சினையை தீர்ப்பதாக கூறி இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்திய தமிழ் கூட்டமைப்பினர் வடக்குக்கான ரயில்சேவைக்கு அழுத்தம் கொடுப்பதில் எவ்வித கரிசனையும் செலுத்தவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக ரயில் பாதைகளை புனரமைக்கும் பணிகளை அரசு முன்னெடுத்த போதும் அதனை துரிதப்படுத்துவதற்கான வலியுறுத்தல்கள் எதனையும் இவர்கள் விடுக்கவில்லை என்பதையும் இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.

குறைந்த கட்டணத்திலான இந்த சேவையின் மூலம் பரந்து பட்ட ஒரு ஆதரவுத்தளம் அரசை நோக்கி தமிழ் மக்களிடத்தில் வலுப்பெற்றுவிடும் என்கிற அச்சம் இந்தத் தலைவர்களை வேறு அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

குடாநாட்டிலும் வன்னியிலும் அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளின் சாதக பாதக நிலமைகளை சுட்டிக்காட்டி அவசியம் முன்னுரிமைப்படுத்த வேண்டிய திட்டங்களை ஜனாதிபதி யின் கவனத்துக்கு கொண்டுவர... வடமாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை தமிழ் கூட்டமைப்பினர் நன்றாகப் பயன்படுத்தி இருக்க முடியும்.

இந்த சந்திப்பை தவிர்த்துக் கொண்டதன் மூலம் தமிழ் மக்களிட் மிருந்து தமக்கு கிடைக்கக் கூடிய தார்மீக ஆதரவை தாங்களாகவே தமிழ் கூட்ட மைப்பினர் மறுதலித்திருக்கிறார்கள் என்பதுதான் இங்கே உண்மையில் நிகழ்ந்திருக்கிறது.

எப்போதும் பெறமுடியாதவை பற்றிப் பேசியே உள்ளதையும் கெடுக்கும் இந்த தமிழ் கூட்டமைப்பினரின் பழக்க தோஷம் தான் இந்த சந்திப்பிலிருந்தும் அவர்களை புறம்தள்ளி வைத்திருக்கிறது.

தென்னிலங்கையிலும் கூடவே தமிழ் சூழலிலும் பரஸ்பரம் வெளிப் படுத்தப்படும் இன்வாத உணர்வலைகளின் இடையேயும், ஒரு சவாலாக அரசு முன்னெடுக்கும் இவ்வாறான திட்டங்களை வளவாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களுக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என சிந்திப்பதுதான் நம் தமிழரின் புத்திசாலித்தனமான அரசியலாக இருக்க முடியும்.

அதனை விடுத்து கையில் கொடுப்பதையும் தரையில் தட்டி வீழ்த்தும் பயனற்ற அரசியலை இனியாகிலும் நாம் கைவிட மறுப்போமாயின் அது எம்மை நாமே வீழ்த்துவதற்கான ஆம்பமாகத்தான் இருக்க முடியும்.

# கே.வி. மகாதேவன் 16



- பி.ஜி.எஸ்.மணியன் -

என்.டி. ராமராவ், பத்மினி, சிவாஜி கணேசன், நரசிம்மபாரதி, டி.கே. பகவதி, எம்.என். ராஜம், சி.டி. ராஜகாந்தம், ஜி. வரலக்ஷ்மி, நாகையா, சந்தியா என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே "சம்பூர்ண ராமாயணம்" படத்தில் இருந்தது.

மூதறிஞர் ராஜாஜி பார்த்த ஒரே திரைப்படம். "இந்தப் படத்தில் நான் ராமனைப் பார்க்கவில்லை. பரதனைத்தான் பார்த்தேன்" என்று அவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வியந்த படம்.

ஏ.பி. நாகராஜனின் முதல் புராணப் படம் இதுதான். ஆனால் இந்தப் படத்தை அவர் இயக்கவில்லை. கே.சோமு தான் இயக்கினார். கதை வசனம் மட்டும் ஏ.பி. நாகராஜன். ஆனால் இந்தப் படத்துக்காக அவர் நிறையப் படித்து ஆராய்ச்சிகள் செய்து பல மேதைகளைச் சந்தித்து அறிவை வளர்த்துக்கொண்டு... உயர்ந்தார் அவர்.

அவருக்கு இசையால் பக்க பலமாக நின்றார் கே.வி. மகாதேவன். பாடல்களிலும் சரி, பின்னணி இசையிலும் சரி - படத்தை இசையால் ஒரு தூணாக தாங்கி நின்றார் மகாதேவன் என்றால் அது மிகை அல்ல.

பாடல்கள் ஒவ்வொன்றும் ராகக் களஞ்சியங்கள். அனைத்துப் பாடல்களையும் எளிமையாக, அழகாக, அற்புதமாக வடிவமைத்தவர் கவிஞர் மருதகாசி.

வனவாசம் சென்ற ராமனைத் தேடி பரதன் வருகிறான்.

"அன்னையும் பிதாவுமாகி அறிவூட்டும் ஆசானுமாகி" என்று விருத்தமாக ஆரம்பிக்கும் பாடல். யதுகுல காம்போஜி ராகத்தில் துவங்கும் பாடலில் "என் மனம் அறியாயோ என் அரும் தமையனே" என்று அடாணாவில் தொடர்ந்து.. "ஏன் பிரிந்தீர் என்னை ஏன் பிரிந்தீரோ இந்த வேதனை நான் இனி தாளேன்." என்று ஜோன்புரியில் பாடலாக மாறி "ராமா ராகவா அருமை ராமா ராகவா" என்று பாடலை உச்சத்துக்கு கொண்டுசெல்லும்போது பரதனின் துடிப்பை கேட்பவர் யாராக இருந்தாலும் உணர முடியும்.

பரதனுக்காக (சிவாஜி கணேசன்) பாடி இருப்பவர் டி.எம். சௌந்தரராஜன். (ஹரிதாஸ் படத்தில் வரும் "என்னுடல் தனில் ஈ மொய்த்த போது" என்று துவங்கும் "தாயே தந்தையே" பாடலின் அப்பட்டமான கொப்பிதான் இந்தப் பாடல்.. இசைச் சக்ரவர்த்தி ஜி. ராமநாதனின் பாதிப்பு கே.வி. மகாதேவனிடம் இருந்ததை பாடல் உணர்த்துகிறது.)

ராமனிடம் பாதுகை பெற்று திரும்பும்போது பரதனும் சத்ருக்னனும் பாடுவதாக அமைந்த "பாதுகையே துணையாகும்" என்ற பாடலை டி.எம். சௌந்தரராஜனும் சீர்காழி கோவிந்தராஜனும் இணைந்து பாடி இருக்கின்றனர். சாமா, பீலு ஆகிய இரண்டு ராகங்களை இணைத்து இந்த ராகமாலிகைப் பாடலை உருவாக்கி இருக்கிறார்.




சபரி மோட்சம், அனுமனைக் காணுதல், சுக்ரீவனுடன் நட்பு, வாலிவதம், சுக்ரீவ பட்டாபிஷேகம், அனுமன் கடல் தாண்டுதல் ஆகிய கட்டங்களை உள்ளடக்கிய பாடல் "சபரிக்கு ராமனும்" என்று துவங்கும் பாடல்.

இந்தப் பாடலை பூர்வி கல்யாணி, சிவரஞ்சனி, மாயமாளவ கௌளை, சாரங்கா, மோகனம், சாமா ஆகிய ராகங்களைக் கையாண்டு அமைத்திருக்கிறார். வெண்கலக் குரலில் சீர்காழி பாடியிருக்கும் அழகே தனி.

சம்பூர்ண ராமாயணம் படத்திலேயே இதுவரை எந்தத் தமிழ்ப் படத்திலேயும் காணவே முடியாத ஒரு புதுமையான கையாளல் ஒன்றும் இருக்கிறது.

"அதென்ன புதுமை?"

பொதுவாக ஒரு திரைப்படத்தில் கதாநாயகனை அறிமுகப் படுத்தும் போதுதான் அவனைப் புகழ்ந்து பாடல் காட்சி அமைப்பது வழக்கம். அல்லது கதாநாயகனே ஒரு பாடலை பாடிக்கொண்டு தான் அறிமுகமாவார்.

அன்றைய எம்.ஜி.ஆர், சிவாஜி முதல் இன்றைய விஜய், அஜீத், சிவகார்த்திகேயன் வரையிலும் இது எழுதப்படாத சட்டம். மாற்றக்கூடாத - மாற்றமுடியாத சம்பிரதாயம்.

ஆனால்.. வில்லன் கதாபாத்திரத்தை அறிமுகம் செய்யும் போது அவனைப் புகழ்ந்து - அவனது பெருமைகளைப் பேசும் வகையில் பாடல் காட்சி அமைந்த படம் "சம்பூர்ண ராமாயணம்" மட்டும்தான்.

ராமாயணக் கதையில் வில்லனான அந்த ராவணன் அறிமுகமாகும் முதல் காட்சியே ஒரு பாடலுடன்தான்.

அவ்வளவு ஏன்? இந்தப் படத்தில் ராமனாக நடிக்கும் என்.டி. ராமாராவுக்கே பாடல் காட்சி கிடையாது.

ராவணனுக்கு மட்டும் தான் பாடல். அதுவும் ஒன்றல்ல மூன்று பாடல்கள்!

"தென்னாடுடைய சிவனே" என்று விருத்தமாக தொடங்கி "கண்பாரும் எனை ஆளும் கயிலை வாசா - உன் பாதம் நம்பினேன் உமா மகேசா" - என்று சிவபூஜை செய்யும்போது ராவணன் பாடுவதாக அமைந்த காட்சியே ராவணன் அறிமுகமாகும் முதல் காட்சி. ஷண்முகப்ரியா ராகத்தில் இந்தப் பாடலை அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

இந்தப் பாடலை ராவணனுக்காக பின்னணியில் பாடியிருப்பவர் ராமன். சாதாரண ராமன் இல்லை. ஜெயராமன்!


ஆம். சி.எஸ். ஜெயராமன் தான் ராவணனாக நடித்திருக்கும் டி.கே. பகவதிக்கு பின்னணி பாடி இருக்கிறார்.

இந்தப் பாடல் என்று அல்ல. ராவணன் பாடுவதாக அமைந்த மூன்று பாடல்களையுமே இவர் தான் பாடியிருக்கிறார்.

(தொடரும்)

# கூட்டமைப்பின் திருமணம் நடக்குமா?

- வே.அர்ச்சுணன் -



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களுக்கான காவலர்களாக தங்களை வெளிப்படுத்தி வருகின்ற போதும் இவர்களது உள்வீட்டு விவகாரங்களும் குத்துவெட்டுக்களும் இப்பொழுது சந்தி சிரிக்கும் அளவிற்கு மக்கள் முன் அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

வடமாகாணசபையின் முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன் கூட்டமைப்பிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகள் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

எங்களது ஆதரவில், எங்கள் தோள் மீது ஏறி நின்று கொண்டு முன்னாள் ஆயுதக்குழுக்கள் தீண்டத்தகாதவர்கள் எனப்பேசும் முதல்வர் விக்கினேஸ்வரன் தமிழினத்தின் துரோகி என எம்மால் பேசப்படும் நிலை உருவாகும் என்று வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கண்டனம் வெளியிட்டிருந்தார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் தனது பலத்த எதிர்ப்பினை வெளியிட்டதுடன் இருதரப்பிலும் தற்போது கடுமையான முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, மாவை சேனாதிராஜா தான் அகிம்சைப்போரை பெரியளவில் தொடங்கப் போவதாகக் கூறி வெளிநாடுகளில் பெரும் பிரச்சாரப்போரை முன்னெடுத்து வருவதுடன் தனது பழைய நண்பர்களிடம் சொல்லி பாராட்டு விழாக்களையும் பொன்னாடைகளையும் ஏற்பாடு செய்து, ஐரோப்பிய நாடுகளில் தனக்குத்தானே புகழைத்தேடும் வேலையில் மும்முரமாக இருக்கிறார்.

மறுபுறத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தானே பிரபாகரனுக்கு நிகரான தலைவன், மாவை சேனாதிராஜா உட்பட மற்ற எல்லோரும் பேய்க்கூத்தாடிகள், இவர்கள் ஒருவருமே தமிழ்த்தேசியம் தொடர்பில் உறுதியான நிலைப்பாடு இல்லாதவர்கள் என்று முரசறைந்து வருகிறார்.

தமிழ்த்தேசியம் தொடர்பில் நானும் அனந்தியும் மட்டும்தான் மக்களுக்கு விடிவைக் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றோம். கஷ்ரப்பட்ட மக்களுக்கு உதவுகின்றோம். மாவீரர் குடும்பங்கள் அங்கவீனமுற்ற போராளிகள் ஆகியோரது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு உதவிகளை மேற்கொள்கின்றோம் என்று கூறி புலம்பெயர் நாடுகளில் பெருமளவான நிதியைச் சேகரித்து, வரப்போகும் தேர்தல்களில் அடிப்பொடிகளுக்குத் "தண்ணிவார்க்க" அதையெல்லாம் சொந்தக் கணக்கில் சேமித்து வருகிறார்.

சிறீதரன் தற்போது பெருமளவான நிதியை சுவிஸ் வங்கியில் வைப்புச்செய்து வருவதாகவும், தனது வெளிநாட்டுப் பயணத்தின்போது ஒரு சொகுசு உல்லாச விடுதியில் இருந்தவாறு அந்த விடுதியில் வந்து தன்னைச் சந்திப்பதற்குப் பலருக்கும் அழைப்பு விடுத்ததாகவும் அண்மையில் சுவிஸ்நாட்டிலிருந்து கிளிநொச்சிக்கு வருகைதந்திருந்த ஒரு கூட்டமைப்பின் விசுவாசமான நபர் இவரது திருகுதாளங்கள் தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

தற்போது சிறீதரன் ஒரு புதுக்கதையையும் தனது எடுபிடிகளிடமும் வால்பிடிப்பவர்களிடமும் கூறிவருகின்றார். அதாவது தலைவர் பிரபாகரன் முள்ளிவாய்க்காலில் நின்றபோது பல ஆதங்கங்களையும் எதிர்காலத் திட்டங்களையும் தன்னிடம் வெளியிட்டதாகவும், தலைவர் இல்லாத போதும் அவர்கூறிய கருத்துக்களும் வார்த்தைகளும் இப்போதும் தனது மனக்கண் முன்பாக நிழலாடுவதாகவும் நினைக்க நினைக்க கவலையாக இருப்பதாகவும் அவிட்டுவிட, பாவம் ஒன்றும் தெரியாத இவரது எடுபிடிகளும் புலம்பெயர்ந்த சில தமிழர்களும் கதையை நம்பி சிறீதரனை இன்னொரு பிரபாகரனாக பார்த்துவருகின்றனர்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் சிறீதரன் வன்னியில் இறுதியுத்தத்தை ஒருபோதுமே கண்ட மனிதரல்ல. இடையில் குறுக்கு வழியால் உள்ளே தப்பி ஓடிவந்தவர்தான். புலிகளுக்குத் துரோகம் இழைத்துவிட்டு உள்ளே தப்பிவந்ததற்காக இவரது மைத்துனரான கேணல்.தீபனே இவர்மீது கடுங்கோபத்திலிருந்தார்.

இன்னொரு விடயமும் உண்டு. சிறீதரனிற்கும் அவரது மனைவிக்குமிடையில் ஒருதடவை குழப்பம் வந்த பொழுது எதிர்பாராத விதமாக கேணல் தீபனும் தனது சகோதரியைப் பார்ப்பதற்காக அங்கு சென்றிருக்கின்றார். ஆனால் தீபனுக்கு தனது சகோதரியும் மைத்துனரும் சண்டைபிடித்த விவகாரம் தெரிந்திருக்கவில்லை. இதன் பின்னர் சிறீதரன் தனது கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த பிரபாகரனின் கடைசி மகனான பாலச்சந்திரனை ஏற்றுவதற்காக அவனது தாயார் ஒருதடவை பாடசாலைக்கு வந்த பொழுது தீபன் தனது குடும்பப் பிரச்சினையில் தலையீடு செய்வதாகவும் பிஸ்ரலைக் கையிலெடுத்து அச்சுறுத்தியதாகவும் முறைப்பாட்டுக் கடிதமொன்றை பிரபாகரனின் மனைவியினூடாக பிரபாகரனிடம் சேர்ப்பித்தார். இதனையடுத்து பிரபாகரன் தீபனை அழைத்து எச்சரிக்கை செய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சிறீதரனின் தில்லு முல்லுகள் ஒருபுறமிருக்க, மாவையார் தனது அகிம்சைப்போரைத் தொடங்க நாட்களை எண்ணிக்கொண்டிருப்பதுடன் அதற்குரிய முகூர்த்த நேரத்தை கணித்துத்தருமாறு சோதிடர்களை நாடிச்செல்வதாகவும் சில தரப்புக்கள் கருத்துக் கூறுகின்றனர் சிலவேளைகளில் இந்த அகிம்சைப்போருக்கு முகூர்த்த நேரம் மட்டுமல்ல அதற்குரிய ஆண்டும் ஒத்துவரவில்லை எனக்கூறி சிலவேளைகளில் 2016ம்ஆண்டிற்கும் அகிம்சைப்போர் ஒத்திவைக்கப்படலாம் என்று சிலர் சொல்கிறார்கள்.

அதுவரை கூட்டமைப்பின் பதிவும் நடக்கப்போவதில்லை. தீர்வு தொடர்பான திட்டமும் முன்வைக்கப்படப் போவதில்லை என்பதால், அகிம்சைப் பெண்ணிற்கு மாவை எப்போது தாலிகட்டுவார் என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாகும்.



# நாம் மண்வெட்டியா...?

ஒரு முதலாளி, தனக்குச் சொந்தமான பரந்த இடம் முழுதிலும் தென்னங்கன்றுகளை நட வேண்டும் என்று முடிவு செய்தார். மரக் கன்றுகள் நடுவதற்குப் பள்ளம் வெட்ட, வேண்டிய வேலையை ரங்கன் என்பவனிடம் ஒப்படைத்தார்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நன்றாக உழைத்து நிறையச் சம்பாதித்துவிட வேண்டும் என்று நினைத்தான் ரங்கன்.ஏனென்றால், அவன் தன் மகளின் திருமணத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்து வருகிறான். இன்னும் போதுமான அளவு பணம் சேரவில்லை.

ரங்கன், முதல் நாளில் இருபது மரக் கன்றுகளை நடுவதற்குப் பள்ளம் தோண்டினான். அவன் உழைப்பைக் கண்டு முதலாளி அவனை மிகவும் பாராட்டினார். பிறகு, ஒவ்வொரு நாளும் அவன் தோண்டுகிற பள்ளத்தின் எண்ணிக்கை குறைந்து வரத் தொடங்கியது. நாற்பதாம் நாளில் அவன், காலையிலிருந்து மாலை வரை எவ்வளவோ முயன்றும் இரண்டு பள்ளங்கள்தான் தோண்ட முடிந்தது. ரங்கன் மிகவும் ஏமாற்றமடைந்தான்.


"முதல் நாளின்போது இருபது பள்ளங்கள் தோண்டியவன் நாற்பதாம் நாளில் இரண்டு பள்ளம் தோண்டுகிறானே, இவனுக்கு என்ன ஆயிற்று?" என்று முதலாளியும் குழம்பினார். அவர் ரங்கனின் மண்வெட்டியை வாங்கிப் பரிசோதித்துப் பார்த்தார். மண்வெட்டியின் முனை கூர் மழுங்கியிருந்தது.

அவர் ரங்கனிடம், "நீ உன் பணி ஆயுதத்தைக் கூர்தீட்டி நன்றாக வைத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டார்.

ரங்கன் சொன்னான். "இதற்கெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூட நேரமே இல்லை, அய்யா! நான், நாள் முழுதும் சிறிதும் ஓய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். நிறைய வேலை செய்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமே!"

முதலாளி சொன்னார், "ரங்கா, இந்த மண்வெட்டியைப் போலத்தான் நாமும். நம் அறிவுத் திறனும், உடல் பலமும் மழுங்கி விட்டால் நம்மால் எதுவுமே செய்யமுடியாது. நமக்கு எவ்வளவோ கடமைகள் இருக்கலாம். நிறைய உழைக்க வேண்டி வரலாம். ஆயினும் நம் உடலையும், மனதையும், அறிவையும் எப்போதும் பேணி கூர்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மால் நிறையச் சாதிக்க முடியும். நம் இலக்கை விரைவில் அடைய முடியும்!


# பனங்கிழங்கு மகிமை!



- பனங்கிழங்கு குளிர்ச்சித் தன்மை உடையது.
- மலச் சிக்கலைத் தீர்க்கக் கூடியது.
- கிழங்கை மாவாக்கி அதோடு பனங்கட்டியும் சேர்த்து உருண்டை பிடித்துத் தினமும் சாப்பிட்டால் உடலுக்கு வலு கிடைக்கும்.
- கிழங்கை வேகவைத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, மாவாக்கி சாப்பிட்டு வந்தால் மெலிந்த தேகம் பருமனாகும்.
- பனங்கிழங்குடன் தேங்காய்ப்பால் சேர்த்து சாப்பிட்டால் உடல் உறுப்புகள் வலுவடையும்.
- பனங்கிழங்கை வெயிலில் காயவைத்து ஒடியலாக்கி, மாவாக்கி பிட்டு, கூழ் முதலியன செய்து சாப்பிட்டுவர, நோயற்ற நீண்ட வாழ்வுக்கு உத்தரவாதம்.

# சிலம்பாட்டம்!

- 3 நிமிடம் சிலம்புக்கம்பை சுற்றினால் ஒரு மணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொண்டதற்கு சமமாகும்.
- நீச்சலைப் போல உடலின் அத்தனை தசைகளுக்கும் வலுவைத் தரும் பயிற்சி இதுவாகும்.
- இவ்விளையாட்டினால் தன்னம்பிக்கையும், நினைவாற்றலும் பல்கிப் பெருகும்.
- மூட்டுவலி, நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு, மூலநோய் போன்றவையும் குணமடையும்.
- இவ்விளையாட்டு ஒரு சிறந்த மூச்சுப்பயிற்சியாகவும் இருப்பதால் சளி, மூக்கடைப்பு, சைனஸ் தொந்தரவுகள் போன்றவை வர வாய்ப்பில்லை. அந்நோய்கள் இருந்தாலும் இல்லாமல் போய் விடும்.
- தொடர்ந்து 6 மாத பயிற்சியில் விளையாட்டின் அனைத்து நுட்பங்களையும் கற்றுக் கொள்ளலாம். நோய்களிலிருந்தும் நம்மைத் தற்காத்துக் கொள்ள வல்ல கலை இது.



# பல கல்விமான்களையும் கலைஞர்களையும் பெற்றெடுத்த கௌரவமான புனித பூமி அச்சுவேலி




யாழ் மண்ணின் ஒவ்வொரு கிராமமும் தன்நிறைவு பெற்று திகழ்ந்ததெனில் அது மிகையாகாது. இவ்வாறு பெயர் பெற்று, புகழ்பரப்பி பெருமையுடன் வாழ்ந்த கிராமங்களில் அச்சுவேலியும் ஒன்று. அச்சுவேலி (Atchuvely) இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள கிராமம். இதன் உப பிரிவுகளாக இடைக்காடு, வளலாய், தம்பாலை, பத்தமேனி, கதிரிப் பாய் போன்ற கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இந்நகரத்தின் வடக்கே தொண்டைமானாறும், தெற்கே ஆவரங்காலும், மேற்கே ஒட்டகப புலம், வசாவிளானும், கிழக்கே வல்லை கடலின் தொடர்சசியுடன் கூடிய பரந்த வயல் வெளியும் பற்றைக்காடுகளும் காணப்படுகின் றன. இங்கு வசிப்பவர்கள் பெருமளவு விவசாய பின் னணியை கொண்டவர்களாகவே உள்ளனர். இவர்கள் இந்து, கிறித்தவ மதங்களைப் பின்பற்றி வருகின்றனர். பல இந்து ஆலயங்கள் காணப்படுவதுடன் இரண்டு கிறித்தவ தேவாலயங்களையும் தன்னகத்தே கொண் டுள்ளது.



அச்சுவேலி கதிரொளி ராகேட் விளையாட்டு கழகம் நடாத்திய போட்டியில் இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றிய குறிஞ்சிக்குமரன் அணி. - 2014

**அச்சுவேலி -காரணப் பெயர்**

அச்சுவேலி என்னும் எழில் கொண்ட கிராமம் முக்கனியின் சாறெடுத்து முத்தமிழின் தேனெடுத்து எத்திசையும் புகழ்பரப்பி, எழில்கொண்டு கலை மக ளும் திருமகளும் கலந்து உறைந்த செமமண் பூமி. அச்சுவேலி ஒரு காரணப் பெயர் என்று சொல்பவர் களுமுண்டு. அதாவது யாழ்.நகரில் இருந்து பருத தித்துறைக்குச் செல்லும் பெருந்தெரு அச்சுவே லியை மையமாகக் கொண்டே செல்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்தையும் பருத்தித் துறையையும் இணைக் கும் வண்டிச்சக்கர அச்சுப்போல் இக்கிராமம் இருந்து 'அச்சுவேலி' என நாமகரணம் பெற்றதென்பது ஒரு வர லாறு.



வில்லிசைக் கலைஞர் நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி)

அச்சுவேலிச்சந்தி ஒரு முச்சந்தி. முச்சந்தியில் இருந்து பலவீதிகள் பிரதான இடங்களை நோக்கிச் செல்கின்றன. ஒன்று புத்தூர், நீர்வேலி, கோப்பாய் ஊடாகச் சென்று யாழ்.நகரை அடைகிறது. அது அச்சுவேலி யாழ்ப்பாண பிரதான வீதி. மற்றறையது தோப்பு ஊடாகச் சென்று யாழ் நகரை அடையும் இராச வீதி, இது பருத்தித் துறையை அடைகிறது. வல்வெட்டித்துறைக் கடற்கரை ஊடாக, நெல்லியடி தரைவழியாக, இப்படியாக பல வீதிகள் பருத்தித்துறையை அடைகின்றன. வல்வெட் டித்துறை வழியாகப் பருத்தித்துறை செல்லும் வீதிக் குச் தனிச்சிறப்புண்டு. தொண்டமானாறு செல்வச் சந் நிதியான் திருத்தல தரிசனம் காணும் பாக்கியம் தான் அது. அந்தக் கடற்கரையும் அதனை அண்டியுள்ள தென் னம் தோப்புகளும் இயற்கை எழில் கொஞ்சும் இணை யற்ற காட்சிகள்

**இங்குள்ள இந்துக் கோவில்கள்**

காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் (அச்சுவேலி தெற்கு)
சித்திர வேலாயுதர் கோவில் (அச்சுவேலி வடக்கு)
மகிழடி வைரவர் கோவில் (அச்சுவேலி நகரப்பகுதி)
பத்தமேனி பிள்ளையார் கோவில் (அச்சுவேலி பத்தமேனி)
சிவசக்தி கோவில் (அச்சுவேலி தெற்கு)
போதிப்பிள்ளையார் கோவில் (அச்சுவேலி தோப்பு)
பயித்தோலை நரசிம்ம வைரவர் கோவில் (அச்சுவேலி மத்தி)
முனியப்பர் கோவில் (அச்சுவேலி வல்லை வீதி)
புனித சூசையப்பர் ஆலயம் (அச்சுவேலி மேற்கு / தென்மூலை)
அந்தோனியார் கோவில் (அச்சுவேலி வடக்கு)
புரட்டத்தாந்து ஆலயம் (அச்சுவேலி நகரப்பகுதி)

**இங்குள்ள பாடசாலைகள்**

அச்சுவேலி மத்திய கல்லூரி
அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
புனித திரேசா மகளிர் கல்லூரி

**அச்சுவேலியைச் சேர்ந்த பெரியார்கள்**

சுவாமி ஞானப்பிரகாசர்
பாவலர் தம்பிமுத்துப்பிள்ளை
சேர் சிற்றம்பலம் கார்டினர்
பேராசிரியர் நந்தி
பேராசிரியர் பாலசுப்ரமணியம்






**அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மீண்டும் வடக்கு மக்களின் கைகளில்**



அச்சுவேலி மத்திய கல்லூரிக்கான புதிய கட்டடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைப்பு







அச்சுவேலியில் சிறப்புற இடம்பெற்ற கிராமிய பண்பாட்டுப்பெருவிழா - 2014

# கலை மன்றங்களின் செயற்பாடுகள் கலையை வளர்ப்பனவாக அமையவேண்டும்

## காவேரி கலாமன்ற இயக்குநர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கலையூடாக சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தினால் கலை சார்ந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப் படுகின்றன. அந்தவகையில் கலை மன்றங்கள் கலையை உத்வேகத்துடன் வளர்க்கவேண்டும் என கிளிநொச்சி காவேரிகலா மன்றத்தின் இயக்குநர் அருட்கலாநிதி ரி.எஸ். ஜோசுவா தெரிவித்தார்.

மன்றத்தின் மாணவர்களால் அண்மையில் கலாமன்றத்தின் திறந்த வெளியரங்கில் நடாத்தப்பட்ட " முற்றத்து முழுநிலா" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காவேரி கலாமன்றமானது கிளிநொச்சி மாவட்டத்தில் பலவித பணிகளை தொடர்ச்சியாக மேற் கொண்டுவருகிறது.

கலையூடாக சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன், சிறுவர்கள் மத்தியில் கலையார்வத்தை ஏற்படுத்தி, அவர்கள் சமூக ஊக்கிகளாக மாற்றிவரப்படுகின்றது. இதற்காக பல சிறுவர் நாடகக் குழுக்களை உருவாக்கி வருகின்றது.

காவேரி கலா மன்றத்தால் உருவாக்கப்பட்ட செட்டியக்குறிச்சி ஞானிமடம் பிரதேசத்தின் 'புரட்சி நண்பர்கள் நாடகக்குழுவினர் நாடகத்தினூடான சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக தமது கிராமத்தில் மேற்கொள்கின்றனர்.

சமூக முன்னேற்றத்திற்கான நாடகக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. அந்த வகையில் பூநகரி நல்லூர் பிரதேசத்தின் நாடகக் குழுவும், அவர்களின் அரங்க செயற்பாடுகளும் காவேரி கலா மன்றத்தால் உருவாக்கப்பட்ட செட்டியக்குறிச்சி கறுக்காய்தீவு பிரதேசத்தின் 'முத்துக்குமார்' நாடகக்குழுவினர் சமுதாய முன்னேற்றத்திற்காக துடிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

இம் மன்றத்தால் உருவாக்கப்பட்ட முழங்காவில் நாடக குழுவினர் வெற்றிகரமாக அரங்க செயற பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின் றனர் என்றார். (90)

# மாணவர்களுக்கு கருத்தரங்குகள்

(அச்சுவேலி)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த(சா/த) சாதாரணப் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களுக்காக நடாத்தப்படும் உதவிக் கருத்தரங்குகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரை நடைபெறுமென யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்தரங்கு தொடர்பான நேர அட்டவணை பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தரம் 09 மற்றும் தரம் 11 மாணவர்களுக்காக வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாகாண மட்டப் பொதுப்பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் பரீட்சைகள் தொடர்பான நேரசூசிகைகளும் பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)


## அனலைதீவு பொது நூலகத்தில் பயன்தரு வீடியோ படக்காட்சி

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கு பயன்தரு படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

இன்று தொடக்கம் எதிர் வரும் 31ஆம் திகதி வரை தினசரி பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை படக்காட்சி பொது நூலக மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் வாசகர்களை பங்குபற்றி பயன்பெறுமாறு நூலக சமூகத்தினர் கேட்டுக்கொண் டுள்ளனர்.

## வெள்ளி நற்சிந்தனை...



# வீமன் செய்த பூசை

மகாபாரதத்தில் ஒரு கதை வருகிறது. அருச்சுனன் கைலாயத்துக்குப் போனான். தெரு வழியே போய்க் கொண்டிருக்கும் போது சிவ பெருமானுக்குப் பூஜை செய்த பத்திர புஸ்பங்களாகிய நிர்மாலியத்தை வண்டி வண்டியாக எடுத்துச் சென்று சிவ கணத்தினர் ஓர் இடத்தில் கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். முதலில் அது இன்னதென்று அருச்சுனனுக்குத் தெரியவில்லை இவை என்ன? என்று கேட்டான்.

" இவை யாவும் நிர்மாலியம், ஒரு பக்தன் சிவபெருமானை பூசை செய்தவை " என்றார்கள்.

" ஒரு பக்தனா இத்தனை பூக்களையும் கொண்டு பூசித்திருக்கிறான்! என்ற வியப்பு அருச்சுனனுக்கு உண்டாயிற்று' அந்தப் பக்தன யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. "அந்தப் பக்தன் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா? என்று அருச்சுனன் கேட்டான்.

"பூவுலகில் பஞ்சபாண்டவர்கள் என்று இருக கின்றார்களாம்" அவர்களில் மூத்தவர் தர்ம புத்திரர்;அவருக்கு அடுத்த தம்பியாகிய வீமசேனர் என்ற சிரோமணியே இத்தனையையும் பூசை பண்ணினார். இதைக்கேட்டவுடனே அருசசுனனுடைய வியப்புபன்மடங்கு மிகுதியாகி விட்டது.

அருச்சுனனுக்கு யோசனை படர்ந்தது. நமமுடைய வீம அண்ணா நிறைய சாப்பிடுவார். அதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை அவா பூசை செய்ததை நாம் பார்த்ததில்லையே! ஒரு கால் பூலோகத்தில் செய்யும் பூசை இங்கே பனமடங்காக விளையும் போலிருக்கிறது. நாம் நாள்தோறும் விடாமல் சிவபூசை செய்து வருகிறோமே அந்த நிர்மாலியம் இங்கே இமாசலம் போலத்தான் குவிந்திருக்க வேண்டும் என்று எண்ணினான். அதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிடித்து உந்தியது.

" அவருடைய தம்பி அருச்சுனன் என்று ஒருவன் இருக்கிறானே அவன் பூசை செய்த நிர்மாலியம் எங்கேயாவது இருக்கிறதா? என்று கேட்டான். அதுவா? அது ஒரு சிறிய பகுதி முன்பே கொண்டுபோய் கொட்டி விட்டோம். இது தான் எடுக்க எடுக்க மாளவில்லை.

அருச்சுனனுக்கு ஒரே மயக்கம் " கைலாச முறையே தனியாக இருக்கிறதே! அண்ணா எப்போது பூசை செய்தார் என்பதை இவர்களிடமே கேட்டுப் பார்க்கலாம் என்று துணிந்து "வீமசேனர் எப்போது பூசை செய்தார் இத்தனை நிர்மாலியம் குவியும்படி? என்று கேட்டார்

'அதை ஏன் கேட்கிறீர்கள்? மற்றவர்கள் எலலாம் நந்தவனம் தேடி மலர் கொய்து வந்து சிவபெருமானுக்கு கையால் அருச்சினை செய வார்கள் மகா பக்தராகிய அவரோ நந்தவனத்தையே அருச்சினை செய்து விடுகிறார்.

" நீங்கள் சொல்வது எனக்கு விளங்க வில்லையே"!

"நந்தவனத்தில் ஒரு மரத்தில் நிறைய மலர் குலுங்கும் அப்படியே கண்ணை மூடிக் கொண்டு அவ்வளவையும் சிவபெருமானுக்கு அருச்சினை செய்வதாக பாவனை செய்வார் அடுத்த கணமே அத்தனை பூக்களும் நிர்மாலியமாக வந்து விழும் இந்த மாதிரி மானசீகமாகப் பூசை செய்யும் பக்தரைப் பார்ப்பது மிகவும் அருமை"

மனத்தால் செய்கின்ற காரியத்திற்கு மதிப்பு அதிகம் என்பது தெரிகின்றதல்லவா!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

நான் சந்தைக்குச் செல்லும்போது, பூச்சி துளைத்த கத்தரிக்காயைத்தான் வாங்குவேன். பூச்சி துளைத்துள்ளதால் அக்கத்தரி நஞ்சு மருந்துகள் தெளிக்கப்படாதது என்றும், மரபணு மாற்றம் ஏற்படாதது என்றும் அறிய முடிகிறது. எனக்கு தேவையற்ற புழு நுழைந்த பகுதியை வெட்டி வீசிவிட முடியும். நஞ்சை மரபிலோ தோலிலோ சுமந்திருந்தால் அதை நீக்க முடியாதல்லவா?

**– தினமணி கதிரில் ஓர் உளவியல் பேராசிரியர்**

ஜெ. கைது விஷயத்தில் தமிழகமே கொந்தளிப்பாக இரு விதங்களில் எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கும் போது இன்னொரு ஜெ –வான, அதாவது எழுத்தாளர் ஜெயமோகன், எவ்வித எதிர்வினையும் ஆற்றாமல் அமைதியாக இருந்தாராம். எனவே அமைதிக்கான நோபல் பரிசை ஏன் அவருக்கே வழங்கியிருக்கக்கூடாது?' என்கிறார் நண்பரொருவர். அப்படியெல்லாம் சொல்லக்கூடாது என்று அவரை கண்டித்து வைத்தேன்.

**– சுரேஷ் கண்ணன்**

ஒருமுறை மொட்டை அடித்தால் இனி முடி திரும்ப முளைக்கவே முளைக்காது என்று ஒரு நிலை இருந்தால் எந்த தொண்டராவது தங்கள் தலைவருக்காக மொட்டை அடிப்பார்களா?

**– பெரியார்**

காமராஜர் மரித்த போது அவர் வாழ்ந்த வீட்டை வீட்டின் உரிமையாளர் எடுத்துக் கொண்டார். பயன்படுத்திய காரை கட்சிக் காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். உடமைகளை அரசு எடுத்துக் கொண்டது. காமராஜர் என்ற பெயரை வரலாறு எடுத்துக் கொண்டது.

**– இந்து நாளிதழில் மு.க. இப்ராஹீம் என்ற வாசகர்**

எதையேனும் ஒன்றை இழந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடுவது என்பது எப்போதுமே புத்திசாலித்தனமான காரியம்தானே?

பைத்தியம் என்பதும் ஒருவன் தன் அறிவை இழந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டதன் விளைவுதானே?

இழப்பதற்குப் பல்லிக்கு வாலும், மரத்துக்குக் கிளையும், மனிதனுக்குக் கொள்கையும், கடவுளுக்கு முகமூடியும் உண்டு.

இழந்தும் பெற்றும்தான் வாழ முடியும் போலிருக்கிறது.

நெருக்கடியில், சோதனை காலத்தில், தன்னில் சிறிது இழந்து, மற்றொன்றில் சிறிது பெற்று, பெற்றதையும் தன்னில் சீரணம் செய்துகொண்டு அழிந்து போகாமல் நிலைத்து விடும் காரியமாகத்தானே நாகரிகம் நிகழ்ந்து வந்திருக்கிறது? மொழியின் வாழ்வும் அவ்வாறுதான் அல்லவா?

அதுதான் இயற்கையின் நியதி போலும்!

**– 'ஒரு புளியமரத்தின் கதை'யில் சுந்தர ராமசாமி**

வெறுப்பில் வெல்ல நினைப்பவர்களே அஞ்சவில்லை. உலகை அன்பால் நிறைக்கும் நான் ஏன் கவலைப்படவேண்டும்.

**– பொப் மார்லி**

ஆன்மீகம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அது தெரியவில்லை என்று ஒத்துக்கொள்வதில் எனக்குத் தயக்கமும் இல்லை. ஆன்மீகவாதிகள் நிறையப் பேரைப் பார்த்துவிட்டேன். எல்லோரும் ஏதோ ஒரு இடத்தில் நமக்குப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக ஆகி விடுகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு சித்தர் செத்துவிட்டார். அவருடைய பெண் பட்டினி கிடந்தே செத்துவிட்டாள். நான் அவளைப் பார்த்தேன். அவளை சித்தருடைய மகளாகத்தான் பார்த்தேன். அந்தப் பெண்ணுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று தோன்றவில்லை. அன்றைக்கு கும்பகோணத்தில் மழையான மழை. அந்தப் பெண்ணுக்கு அப்போது ஒரு நூறு ரூபாயாவது கொடுத்திருக்கலாம். நான்கு நாள்கள் சாப்பிட்டிருப்பாள். ஆனால் நான் கொடுக்கவில்லை. பிறகு அதைப் பற்றி யோசித்தேன். கொடுக்க வேண்டும் என்று ஏன் எனக்குத் தோன்றவில்லை?

இது மாதிரி சின்னச் சின்ன விஷயங்கள்... ஆக ஆன்மீகம் என்று எதை வரையறுப்பது?

என்வரை ஆன்மிகம், முன் ஜன்மம், மறு ஜன்மம், கர்மம் எல்லாமே நிழலாக உள்ளவை. இவற்றுக்கு எனக்குப் பதில்கள் இல்லை. இன்று ஒருவர் வாழ அன்றாட வினை – விளைவு போதுமானது. இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயல்படுகிறதா? இல்லை. காரணம், நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாத காரணிகள். எனக்கு ஆன்மிக வேட்கை உள்ளது என்பதே சுயமயக்கம். என்னால் எனக்குத் தெரிந்தது மேல்தான் வேட்கை கொள்ள முடியும்.

**– அசோகமித்திரன்**

# கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்கள் தொடரும்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு



(கொழும்பு)

தமது கோரிக்கைகள் வெற்றி பெறும் வரை போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இந்தநிலையில் தமது போராட்டத்துக்கு விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளப் போவதாக ஒன்றியம் அறிவித்துள்ளது.

இறுதியாக இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒன்றியத்தினர் நடத்திய போராட்டத்தின்மீது நாடாளுன்ற பிரதேசத்தில் வைத்து கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் இவ்வாறான செயற்பாடுகள் தமது போராட்டத்துக்கு தடைகளை ஏற்படுத்தாது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அமைப்பாளர் நஜித் இந்திக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இந்த அறிவிப்பை விடுததுள்ளார்.

# தொடர்ந்தும் இறந்த நிலையில் கரையொதுங்கும் நந்திக்கடல் மீன்கள்



(கொழும்பு)

முல்லைத்தீவு, வட்டுவாகல், நந்திக்கடலிலுள்ள மீன்கள் தொடர்ந்தும் இறந்த நிலையில் கரையொதுங்குவதனால் அப்பகுதி மீனவர்கள் சிரமங் களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மாதம் இரண்டாம் திகதி முதல் இரு வாரங்களாக குறித்த கடலில் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வந்தன. இதனால், நந்திக்கடலில் மீன்பிடிப்பதற்கு அங்குள்ள மீனவர்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது. சிலாப்பி, கெளிர், மணல், மன்னா, கூறல் உள்ளிட்ட மீன்களே இறந்த நிலையில் கரையொதுங்கியிருந்தன.

இவ்வாறு இறந்த நிலையில் கரையொதுங்கும் மீன்களை வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் மீன்பிடிக் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் துப்புரவு செய்து வருகின்றனர்.

எனினும்,தொடர்ந்தும் நந்திக்கடலிலுள்ள மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதால் அவை துர்நாற்றம் வீசுவதுடன், சுற்றுப்புறச் சூழல் மாசடைவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்

# மோட்டார் சைக்கிள் விபத்து 2 இளைஞர்கள் காயம்

இரண்டு மோட்டார் கைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணித்த இருவரும் படுகாயமடைந்து கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இருபாலைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் வல்வெட்டித்துறை, காட்டுவளவு பகுதியைச் சேர்ந்த தவராசா அனித் (வயது-24), மோகராஜ் கவிராஜ் (வயது - 26) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகனை காப்பாற்றச் சென்ற தந்தைக்கு வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)


மகனை வெட்டவந்தவர்களை தடுக்கச்சென்ற தந்தை வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கந்தரோடையில் இடம்பெற்றுள்ளது.

தீபாவளித் திருநாளான நேற்றுமுன்தினம் பகல் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே உடுவில் பகுதியில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் குறிப்பிட்ட இளைஞனை வெட்டுவதற்க்கு முயன்றபொழுது அவர்களைத் தடுக்க முயன்றஇளைஞனின் தந்தையை அவர்கள் வாளால் வெட்டி படுகாயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.

கழுத்திலும் கையிலும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கந்தரோடையைச் சேர்ந்த தேவராசா முரளிதரன் (வயது 39) என்பவரே காயமடைந்தவராவார்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# பரமர் சங்கமம்

**ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டடென்பர். ஆத்திரக் காறனெண்டால் கோவக்காறனையும் குறிக்கும். அவசரக் காறனையும் குறிக்கும் சமீபகாலங்களில் வெளிவரும் செய்திகளைக் கேட்டால் வேறை எப்பிடித்தான் நினைக்கிறே!**

**ஆத்திரக் காரனும் அவசரக்காரனும் நிண்டு நிதானமாக யோசிச்சுச் செய்தால் ஒரு புழையும் வராது இவங்கட அவசரத் தீர்மானங்களால சம்பந்தப் படாத எத்தினை பேர் எத்தினை விசயங்களால் பாதிக்கப்பட்டிருக்கினம்.**

**சீவனை எடுக்க முடிஞ்சதுகளால சீவனைக் குடுத்திட முடியுமே புலிகளும் எத்தினை புழையளை விட்டு அதால எத்தினையைத் தமிழர் இழந்து போய் நிக்குதுகள். புலிகளைக் பயங்கரவாதப் பட்டியலில் இழந்து ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளதென இப்ப அறிவிச்சுள்ளது.**

**எண்டால் இவ்வுளவு நாளும் அவசரப் புத்தியிலை தானை புலியளை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாதப் பட்டியலில் வைச்சிருந்தேண்டது உண்மையாகுது. இதைப் போலை தான் அவுஸ்ரேலியாக் காறங்கடை விளையாட்டும். அங்கத் தையச் சட்டத்தரணிகள் கடலில் எங்கேயோபோக வெளிக்கிட்ட சனங்களை அவுஸ்ரேலிய அரசாங்கம் கடலில் வைத்துக் கைது செய்தது மனித உரிமைச் சட்டத்திற்கு விரோதமானதெனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**நாளைக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நான்கு வருடகால மறியல் தீந்தும் புழையெனக் கண்டுபுடிச்சு அறிக்கையள் வெளிவந்தால் ஆச்சரியப்படுவதுக்கு என்ன இருக்கு? இன்னொரு புதுமை எங்கடை அரசாங்கம் புலியளின வங்கியளில் அடகு வைச்ச தமிழ்ச் சனங்களின் பவுண் நகைகளை குடுக்கப் போறதா சொல்லி இருப்பது.**

**சனங்கள் உயிர்களைக் கையிலை புடிச்சுக் கொண்டு திரியேக்கை அடகு வைச்சதுண்டுகளையுமோ கொண்டோடுதுகள் அப்படி கொண்டோடியிருந்தாலும் இதுகளெங்கை இனிக் கிடைக்கப் போகுதெண்ட அவசர ஆத்திரப் புத்தியாலை தூக்கி எறிஞ்சதுகளும் உண்டு இதுக்குத் தான் ஆத்திரக் காறனுக்கு புத்தி மட்டெண்டும் சொன்னார்களோ என்னவோ**

**இப்ப அவசரப்பட்டு அரசாங்கம் பவுண் நகைகளைக் குடுக்கவர மற்றப் பவுணுகளெங்கை எண்ட கேள்வியும் அதால தானை எழும்புது. எப்புடியோ அரசாங்கம் நகைகளைக் குடுக்க வந்ததைப் பாராட்டலாம். இதுபோல வலி.வடக்கில் இன்னமும் குடுபடாமல் இருக்கிற தமிழ்ச்சனங்களின் காணிகளையும் குடுக்கலாமெல்லே.**

**அதொண்டும் ஆத்திரம் அவசரப்பட்டெடுக்கிற முடிவாக இருக்காது. எண்டைக்கும் புத்தியோடை மேற்கொண்ட காரியமாத் தான் இருக்கும் என்ன நான்சொல்லுறே விளங்குதே..**

# தேர்தலால் உறுதிப்படுத்தப்படாத பாப்பரசரின் இலங்கை விஜயம்

(கொழும்பு)

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக திகதி எதனையும் அறிவிக்காத நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பாக தீர்க்கமான முடிவேதும் எடுக்கப்படவில்லையென கொழும்பு கத்தோலிக்க தேவாலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேவாலயத்தின் அருட்தந்தை சிறில் காமினி மவ்பிம பத்திரிகைக்கு தெரிவித்துள்ளதாவது,


ஜனாதிபதித் தேர்தல் எந்த திகதியில் நடைபெறுமென கேட்டு கர்தினால் மல்கம் ரஞ்சித், ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியிருந்தார் எனினும் அவரின் கடிதத்திற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

எனவே தேர்தல்கள் ஆணையாளரால் ஜனாதிபதி தேர்தல் எப்போது இடம்பெறுமென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரே பாப்பரசரின் இலங்கைக்கான விஜயம் உறுதிப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் பாப்பரசர் அந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள விரும்புவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பாப்பரசரின் இலங்கை வருகை தயாராகவில்லை முத்திரை



பாப்பரசரின் இலங்கை வருகையை ஞாபகப்படுத்தும் வகையில் ஞாபகார்த்த முத்திரை வெளியிடல் தொடர்பில் முத்திரை வெளியீட்டுத்திணைக்களம் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

தபால் திணைக்களம் மற்றும் முத்திரை காரியாலயம் இணைந்து "பாப்பரசரின் இலங்கை வருகை" என்ற தொனிப்பொருளில் முத்திரை வெளியிடப்படவுள்ள போதிலும் அதன் தயாரிப்பு தொடர்பில் இன்னும் பிரசித்தப்படுத்தப்படவில்லையென்று முத்திரை வெளியீட்டுக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

போலியாக செய்யப்பட்ட முத்திரை காட்சிப்படுத்தப்படாது என்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரியப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ள முத்திரை வெளியீட்டு காரியாலயம் வெளியிடப்படும் மற்றும் வேறு உரிமையுடன் உள்ளவைகளை மட்டுமே காட்சிப்படுத்துமாறும் விற்பனை செய்யுமாறும் வேண்டு கோள் விடுத்துள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளுக்கான அனுமதி வழங்குதல் சட்டவிரோதச் செயல் என்றும் முத்திரை வெளியீட்டுக் காரியாலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை

# அகில இலங்கை ரீதியாக யாழ். கல்வி வலயம் முன்னணியில்

# புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை

அதிசூழய சித்திப் பெறுபேற்றைப் பெற்று யாழ். கல்வி வலயம அகில இலங்கை ரீதியாக முன்னணியில் திகழ்கின்றது. இந்த வெற்றியின் பின்னணியில் இருந்து இவ்வெற்றிக்கு உரம் சேர்த்த பாடசாலையாக யாழ். புனித ஜோண்பொஸகோ வித்தியாலயம் விளங்குகிறது. 140 பேரைச் சித்தியடைய வைத்து 100 புள்ளிக்கு மேல் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரையும் சித்தியடையவைத்து அவ்வித்தியாலயம் வரலாற்றுச சாதனை படைத்துள்ளது. அகில இலங்கை ரீதியாக இப்பாடசாலை இரண்டாமிடத்திலும், அத்துடன் தமிழ்ப் பாடசாலை ரீதியில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளது. அகில இலங்கை ரீதியாக 94 வலயங்களுள யாழ். கல்வி வலயம் முதலாமிடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த விபரங்கள் கீழே உள்ளன.

## Gr 5 Scholarship Analysis

### % Distribution of candidates who obtained marks above cut off by PROVINCE

| Province | Above `Out Off No | % |
|---|---|---|
| Sabaragamuwa | 3630 | 11.84 |
| North Western | 4389 | 11.37 |
| Southern | 4649 | 11.36 |
| **Northern** | **2064** | **11.00** |
| Western | 8425 | 10.18 |
| North Central | 2134 | 9.72 |
| Uva | 2050 | 9.14 |
| Eastern | 2380 | 8.52 |
| Central | 3014 | 6.91 |
| **Isaland** | **32735** | **9.99** |

### % Distribution of candidates who obtained marks above cut off by Education Zone

| No | Education Zone | No. of sat | Above Out Off Number | % |
|---|---|---|---|---|
| 1 | **Jaffna** | 3170 | 516 | **16.61** |
| 2 | Gampaha | 8289 | 1365 | 16.47 |
| 3 | Thangala | 3051 | 458 | 15.01 |
| 4 | Kulipidiya | 4523 | 657 | 14.53 |
| 5 | Walusmula | 2799 | 404 | 14.43 |
| 6 | Nikaraweratiya | 3588 | 516 | 14.38 |
| 13 | Vadamarachi | 1716 | 231 | 13.46 |
| 16 | Themarachi | 807 | 105 | 13.01 |
| 41 | Valikamam | 2942 | 294 | 9.99 |

### Highest Performing Schools (with 20 or more candidate) Based on Performance indices

| No | Zone | School Name | Island Rank |
|---|---|---|---|
| 01 | Gampaha | G/Sri Sumangala M.v | 1 |
| **02** | **Jaffna** | **J/St. Johns Bosco vid.** | **2** |
| 03 | Vavuniya North | V.Puthukulam Jounier School | 7 |
| 04 | Vavuniya South | V/Rambukulam G.M.V | 14 |
| 05 | Mullaithievu | MU/ Vizuvanthar Primary School | |


## Zonal Education Office Jaffna Grade 5 Scholarship - 2014

| School Name | Applied | Sat | Below 158 | Over 158 | Pass % | Rank |
|---|---|---|---|---|---|---|
| Jaffna Zone | 3197 | 3124 | 2608 | 516 | 16.5 | |
| Jaffna Division | 1099 | 1083 | 851 | 232 | 21.4 | 2 |
| Nallur Division | 1105 | 1090 | 857 | 233 | 21.4 | 1 |
| Kopay Division | 993 | 951 | 900 | 51 | 5.4 | 3 |

| School Name | Applied | Sat | Below 158 | No.of pass | Pass % | Rank |
|---|---|---|---|---|---|---|
| J/ ST. JOHN BOSCO'S VID | 231 | 230 | 90 | 140 | 60.5 | 1 |
| J/ JAFFNA HINDU PRIMARY SCHOOL | 327 | 325 | 208 | 117 | 36 | 2 |
| J/ KOKUIVIL HINDU PRIMARY SCHOOL | 153 | 153 | 99 | 54 | 35.3 | 3 |
| J/ ANAIPANTHY MMTMS | 37 | 37 | 24 | 13 | 35.1 | 4 |
| J/ NALLUR KASIPILLAI VID | 14 | 14 | 10 | 4 | 28.6 | 5 |
| J/ NALLUR ST. BENEDICT VID | 70 | 70 | 51 | 19 | 27.1 | 6 |
| J/ SANMARKA MV | 9 | 8 | 6 | 2 | 25 | 7 |
| J/ ST. PATRICK'S COLLEGE | 103 | 103 | 80 | 23 | 22.3 | 8 |
| J/ ST. JOHN'S COLLEGE | 85 | 84 | 67 | 17 | 20.2 | 9 |
| J/ KALVIANKADU HTMS | 32 | 32 | 26 | 6 | 18.8 | 10 |
| J/ JAFFNA HINDU LADIES' PRIM. SCH. | 92 | 91 | 76 | 15 | 16.5 | 11 |
| J/ ST. ROCHES VID | 15 | 13 | 11 | 2 | 15.4 | 12 |
| J/ KOPAY NAVALAR VID | 74 | 73 | 62 | 11 | 15.1 | 13 |
| J/ ST. THERESSA GIRLS COLLEGE | 84 | 81 | 69 | 12 | 14.8 | 14 |
| J/ JAFFNA CENTRAL COLLEGE | 109 | 109 | 94 | 15 | 13.8 | 15 |
| J/ CHUNDIKULI GIRLS' COLLEGE | 100 | 100 | 87 | 13 | 13 | 16 |
| J/ SIRUPIDDY HTMS | 33 | 32 | 28 | 4 | 12.5 | 17 |
| J/ COLUMBUTHURAI THURAIAPPAH VID | 18 | 17 | 15 | 2 | 11.8 | 18 |
| J/ KOKUVIL SRI GNANAPANDITHA VID | 11 | 10 | 9 | 1 | 10 | 19 |


| School Name | Applied | Sat | Below 158 | No off Pass | Pass % | Rank |
|---|---|---|---|---|---|---|
| J/ UYARAPULAM MMTMS | 8 | 8 | 8 | 0 | 100 | 41 |
| J/ARIYALAI EAST GTMS | 2 | 2 | 2 | 0 | 100 | 42 |
| J/ KOKUVIL STATION CCTMS | 11 | 11 | 11 | 0 | 100 | 43 |
| J/ POOMPUHAR GTMS | 9 | 8 | 8 | 0 | 100 | 44 |
| J/ IRUPALAI CCTMS | 5 | 5 | 5 | 0 | 100 | 45 |
| J/ KATHIRIPAI SUBRAMANIYA VID | 5 | 5 | 5 | 0 | 100 | 46 |
| J/ NEERVELY CCTMS | 8 | 7 | 7 | 0 | 100 | 47 |
| J/ THIRUNELVELY RCTMS | 12 | 12 | 12 | 0 | 91.7 | 48 |
| J/ ELAYAYHAMBY HINDU VID | 10 | 10 | 10 | 0 | 90 | 49 |
| J/ KONDAVIL HINDU MV | 31 | 27 | 27 | 0 | 88.9 | 50 |
| J/ KOKUVIL SRI RAMAKRISHNA VID | 16 | 16 | 16 | 0 | 87.5 | 51 |
| J/ VAN. SRI VAITHILINGAM VID. | 16 | 16 | 16 | 0 | 87.5 | 52 |
| J/ ATTIYAR HINDU COLLEGE | 25 | 24 | 24 | 0 | 87.5 | 53 |
| J/ THOPPU ARULNANTHY VID | 10 | 8 | 10 | 0 | 87.5 | 54 |
| J/ NALLUR STATION CCTMS | 6 | 6 | 6 | 0 | 83.3 | 55 |
| J/ CHETTITHERU MMTMS | 13 | 12 | 12 | 0 | 83.3 | 56 |
| J/ URUMPIURAI RCTMS | 19 | 18 | 18 | 0 | 83.3 | 57 |
| J/ KOKUVIL WEST CCTMS | 16 | 16 | 16 | 0 | 81.3 | 58 |
| J/ ATCHELU MMTMS | 7 | 5 | 5 | 0 | 80 | 59 |
| J/ NALLUR SOUTH SRI VIGNESWARA VID | 9 | 9 | 9 | 0 | 77.8 | 60 |
| J/ AVARANGAL MAHAJANA VID | 9 | 9 | 9 | 0 | 77.8 | 61 |
| J/ NAYANMARKADDU MAHESWARY V. | 8 | 8 | 8 | 0 | 75 | 62 |
| J/ KOPAY MV | 16 | 16 | 16 | 0 | 75 | 63 |
| J/KOPAY SOUTH RCTMS | 12 | 12 | 12 | 0 | 75 | 64 |
| J/ KONDAVIL CCTMS | 11 | 11 | 11 | 0 | 72.7 | 65 |
| J/ VATHARAWATHA VIGNESWARA VID | 22 | 17 | 17 | 0 | 70.6 | 66 |
| J/ PUTHAKALLADY SRI VISHNU VID | 23 | 23 | 23 | 0 | 69.6 | 67 |
| J/ PASSAYOOR ST. ANTONY'S GIR. SCH. | 13 | 13 | 13 | 0 | 69.2 | 68 |
| J/ NAVATKIRI AMTMS | 21 | 18 | 18 | 0 | 66.7 | 69 |


# Analysis 2013 Vs 2014

















# பாமர மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் சிறுகதைகளே வரவேற்பை பெறுகின்றன

## பேராசிரியர் சிவலிங்கராஜா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேவி பரமலிங்கத்தின் சிறுகதைகள் குறிப்பாக பாடுபொருளாகப் பெரும்பாலும் பாமர மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அவலங்கள் சுமந்து நிற்கும் சோகங்கள் அவற்றை தகர்க்க எடுக்கும் முயற்சிகள் முதலியனவற்றை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன என யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்தார்.

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் ஏற்பாட்டில் குருநகர் கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேவிபரமலிங்கத்தின் புதிய படைப்புலகம் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வெளியீட்டுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேவி பரமலிங்கத்தின் பதின்நான்கு சிறுகதைகள் புதிய படைப்புலகம் என்ற பெயரில் இப்பொழுது வெளிவருகின்றன. அவ்வப்போது பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த சிறுகதைகளில் பெரும்பாலானவற்றை வாசித்து இருக்கிறேன். இப்பொழுது அவரது பதின்நான்கு சிறுகதைகளையும் ஒருங்கே படிக்கும் வாய்ப்புக் கிட்டியது ஏலவே வாசித்து அவற்றை மீளப்படிக்கும் பொழுது சில புதிய வெளிசசங்கள் தென்பட்டன.

இவருக்குள் ஆவேசமான குமுறல ஒன்று இருக்கிறதென்பதை இவரது கதைகளைப் படிக்கும் போது உணர்ந்து கொணடேன். எல்லாக் கதைகளிலும் ஒரு தனித்துவம் உள்ளது எனினும் கதைப்பொருளின் ஊடுபாவாக ஓடுவது ஏழ்மை, ஏற்றத்தாழ்வு, குடும்பச் சிக்கல், முதலியன எனலாம். நவீன இலக்கியங்களில் மொழி என ஆராயப்புகுவோர். "புதிய படைப்புலகம்" என்னும் சிறுகதைத் தொகுதியை நிராகரித்து விட முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நயப்புரை நிகழ்திய மூத்த பெண் எழுத்தாளரும் உளவள ஆலோசகருமான திருமதி கோகிலா மகேந்திரன் பேசுகையில்

தேவிபரமலிங்கம் குடாக் கடலோரக் கிராம மக்களின் வாழ்வியலை எதார்த்தமாகச் சொல்லியுள்ளார். அதனூடாக அம்மக்களின் பேச்சு வழக்கு வாழ்வு முறைமைகள் பண்பாட்டுகூறுகளை படம். பிடித்துள்ளார். மக்களுடன் மக்களாகச் சேர்ந்து வாழ்ந்து ஒருவராலின்றி வேறொருவரால் இத்தகைய கதைகளைப் படைத்து விடமுடியாது அந்தளவுக்கு கதைகள் வாகசர்களின் இதயங்களோடு ஊடாக நெகிழ வைத்து விடும் பாங்காகப் படைக்கப்பட்டுள்ளன என்றார்.

ஆசியுரையை பங்குத் தந்தை அருட்பணி ப.பத்திரநாதரும் வரவேற்புரையை திருமதி ஷாலினி சாள்ஸும் நன்றியுரையை செபஸ்தியாம் பிள்ளை யூலனும் நிகழ்த்தினர். முதல் பிரதியை வர்த்தகர் பற்றிக் டென்சில் சேவியர் பெற்றுக்கொண்டார்.(68)

# போதனா வைத்தியசாலையின் வரலாறு தெளிவாக எழுதப்பட வேண்டும்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் வரலாறு தெளிவாக எழுதப்படவேண்டும் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு கடமையின் போது படுகொலை செய்யப்பட்ட 21 ஊழியர்களின் 27 ஆம ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திசாலை பதில் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலை எந்தெந்தக் காலத்தில் இடர்பாடுகளைச் சந்தித்து இடப்பெயர்வுக்குட்பட்டது என்பன அதன் வரலாற்றில் குறிப்பிடப்படவேண்டும் இந்த 21 பேரின் அர்ப்பணிப்பான சேவை என்றும பதியப்பட்டிருக்க வேண்டும்.

அது தனியாக படமாக மட்டும் இருக்காமல் வைத்தியசாலை வரலாற்று நூலாகவும் தெளிவாகப்பதியப்பட்டிருக்க வேண்டும்.

இன்று எமது போதனா வைத்தியசாலை சகல மட்டங்களிலும் அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி வருகின்றது. வைத்திய நிபுணர் தரத்தில் இருந்து சாதாரண ஊழியர்கள் வரை வேறுபகுதியில் இல்லாத வகையில் அர்ப்பணிப்பான சேவையை வழங்குவோராக உள்ளனரெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# தங்க நகைகள் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

ஆனைக்கோட்டை சங்கரப் பிள்ளையார் வீதியில் உள்ள வீடொன்றில் இரவு வேளையில் வீட்டின் பின்கதவை உடைத்து பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் வீட்டு உரிமையாளர் வீட்டை பூட்டிவிட்டு தூங்கச் சென்றுள்ளார். நிலையில் மறுநாள் காலையில் எழுந்து பார்த்த போது வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 210 ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மோப்ப நாய்களை ஈடுபடுத்தி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..........................

பெற்றோர் கையொப்பம்

# ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் 285 புதிய நிறுவனங்கள் பதிவு

இவ்வருடத்தின் செப்ரெம்பர் மாதம் வரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 285 புதிய நிறுவனங்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் பதிவு செய்து தமது பங்களிப்புத் தொகையை செலுத்தி வருவதாக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.அலுவலக பொறுப்பதிகாரி ஜெ.தமிழழகன தெரிவித்துள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கும் நிறுவனங்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்வது கட்டாயம் என்று தெரிவித்த அவர் யாழ்.மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் தமது நிறுவனங்களைப் பதிவு செய்து பங்களிப்புத் தொகையைச் செலுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

# வாகன சாரதிகளின் செயற்பாடு விசனமடையும் பொதுமக்கள்

யாழ்.நகரப் பகுதிகளிலும் நகரத்தை அண்டிய பகுதிகளிலும் வாகன சாரதிகள் கைத்தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனத்தை செலுத்தும் செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெறுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பிரதான வீதிகள் உட்பட சிறுவீதிகள் தோறும் பயணம் செய்யும் வாகன சாரதிகள் கைத்தொலைபேசிகளில் உரையாடியபடி செல்வதால் ஏனைய பயணிகள் எவ்வாறு வீதியில் செல்ல முடியும் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வாகன சாரதிகளின் இத்தகைய செயற்பாடுகளாலேயே எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படுவதாகவும் விபத்து இடம்பெற்றால் பாதிப்பு தமக்குத் தான் என வாகன சாரதிகள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் அரச அலுவலர்கள், என பலர் தமது அவசர பயணத்தை மேற்கொள்கின்ற நிலையில் பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் வாகனச் சாரதிகள் சிந்தித்து விபத்துக்களை தவிர்க்க முன்வரவேண்டும் எனவும் இவ்விடயத்தில் போக்குவரத்து பொலிஸாரின் கண்காணிப்பும் அவசியமானது எனவும் பொது மக்கள தெரிவிக்கின்றனர். (66)

# கந்தனின் கருணை பெறும் கந்தஷஷ்டி விரதம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகப் பெருமானுக்குரிய விரதங்களில் சிறந்த விரதமான கந்தஷஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகின்றது. கந்தனின் கருணைபெறும் இந்த விரதம் மிகவும் புனிதமான ஒரு மகிமைமிக்க விரதமாகும்.

ஐப்பசி மாத அமாவாசையயடுத்து வரும் பிரதமை முதலாக ஷஷ்டி ஈறாகவுள்ள ஆறுநாள் அனுஷ்டிக்கப்படும் இந்த விரதமானது திருமணமாகி மக்கட்பேறில்லாதிருக்கும் தம்பதியரால் விரும்பி அனுட்டிக்கப்பெறுகின்ற பெருமையை உடையது.

இதை அனுஷ்டிக்கின்ற விரதகாரர் காலை எழுந்து புனித நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு முருகன் கோலுக்குப் போய் சுவாமி தரிசனத்துடன் விரதத்தை ஆரம்பிக்கலாம். ஆலய குருக்களிடம் தர்ப்பையை வாங்கி அணிந்து கொள் ளலாம்.

சிலர் ஆறு நாட்களும் எவ்வித உணவும் இன்றி மிளகு தண்ணீர் மட்டும் பருகி கடைசி நாள் சூரன்போரன்று உபவாசமிருந்து மறுநாள் பாறணை செய்வர். சிலர் மதியம் மட்டும் ஒரு பொழுதுண்டு இரவு பால் பழம் அருந்தியும் விரதமிருப்பர். சிலர் பச்சைத் தண்ணீருமின்றி மிகக் கடுமையாக விரதமிருப்பர்.

இந்த விரதத்தை விளையாட்டாக எண்ணக்கூடாது "நானும் விரதம் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு முறை தவறி நடந்து பாவத்தைத் தேடிக் கொள்ளக்கூடாது சைவசமயிகள் இவ்விரதத்தை முறையாக அனுஷடித்துக் கந்தப் பெருமானின் கருணைக்குப் பாத்திரமாக வேண்டும்.

ஆணவங்கொண்ட அசுரர்களை ஆறுமுகன் அழித்தொழித்ததைக் கூறுகின்ற இக் கந்தஷஷ்டிப் பெருவிழா முருகன ஆலயங்களில் மிகவும் விசேடமாக நடாத்தப்பெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் செல்வச்சந்நிதி முதலியவற்றைக் குறிப்பிடலாம்.


"பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்" என்பது முதுமொழி அதன் கருத்து என்னவென்றால் கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டித்தால் பெண் வயிற்றுக் கர்ப்பப்பையில் சிசு உருவாகும் என்பதே. ஆகவே குழந்தைப்பேறு வேண்டு மாயின் இவ்விரதத்தை நோற்று பலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விரத காலத்தில் கந்தஷஷ்டி கவசம், கந்தரனுபூதி கந்தலரங்காரம், கந்தபுராணம் முதலானவற்றைப் பாராயணஞ் செய்யலாம். எனவே முருகனின் கருணையைப் பெற்று உய்தி பெறுவோமாக.

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# கனடா நாடாளுமன்றத்தில் துப்பாக்கிச்சூடு

# பாதுகாப்பு படைவீரர் உட்பட இருவர் பலி



கனடாவின் தலைநகரான ஒட்டாவில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் மர்மநபர் நடாத்திய தாக்குதலில் பாதுகாப்பு படைவீரர் ஒருவர் பலியானதுடன் பாதுகாப்பு படை வீரர்கள் நடாத்திய பதில் தாக்குதலில் மர்மநபர் ஒருவரும் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் நாடாளுமன்ற வளாகத்துக்கு பாதுகாப்பு,படையினரின் சீருடை அணிந்து வந்த மர்மநபர் ஒருவர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற மைய கட்டடம், போர் நினைவிடம் உள்ளிட்ட பகுதிகளை நோக்கி சரமாரியாக நடாத்திய தாக்குதலில் பாதுகாப்பு படைவீரர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் இருந்த பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் உள்ளிட்ட அனைவரும் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்ட நிலையில் பாதுகாப்புப் படையினர் நடாத்திய பதில் தாக்குதலில் மர்மநபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து தெரிவித்த பிரதமர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவமானது பயங்கரவாத தாக்குதலாகும் ஆனால் கனடாவை ஒருபோதும் பயங்கர வாதத்தால் அச்சுறுத்த முடியாது என்றார்.

இந்த தாக்கு தலை நடாத்திய நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இதன் போது. சுட்டுக்கொல்லப்பட்ட மர்மநபர் கனடா கியூபெக் நகரைச் சேர்ந்த மைக்கோல் ஜிவராய் எனவும் இவர் மீது பல குற்றச்செயல்களுடனான வழக்குகள் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுகின்றது.

அது மட்டுமன்றி வேறுமர்ம நபர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இருக்கக் கூடும் என்ற அச்சத்தில் நாடாளுமன்றம் மூடப்பட்டு தேர்தல் இடம் பெற்று வருவதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

# 5 நிமிடத்திற்கு ஒரு குழந்தை வன்முறையால் பலி

## யுனிசெவ் அதிர்ச்சி தகவல்

சர்வதேச அளவில் வன்முறையால் 5 நிமிடத்திற்கு ஒரு குழந்தை பலியாவதாக யுனிசெவ் அறிவித்துள்ளது.

ஐ.நா குழந்தைகள் நல நிறுவனமான யுனிசெவ்வின் அமெரிக்க கிளை சமீபத்தில் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டது.

அதில் சர்வதேச அளவில் •வன்முறையால் 5 நிமிடத்திற்கு ஒரு குழந்தை பலியாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிவேகமாக நகர்புறமயமாகுதல், வேலையின்மை மற்றும் சமத்துவமின்மை போன்றவையே இச்சம்பவங்களுக்கு காரணமாகும்.

மேலும் உலகில் நாள் ஒன்றுக்கு 345 குழந்தைகள் வன்முறையால் உயிரிழக்கின்றனர் என்றும், அதை தடுக்க சர்வதேச நாடுகளைச் சேர்ந்த அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எபோலாவை கட்டுப்படுத்தும் நோக்கில் ஐ.நா.வில் அவசர கலந்துரையாடல்




ஆபிரிக்காவில் உள்ள லைபீரியா, கினியா, சியாரா லோன் ஆகிய நாடுகளில் எபோலா நோய் பரவிவருவதுடன் இந்த நோயை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளதுடன் இதுவரை 4 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் ஜெனீவாவில் ஐ.நா. சபையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உலக சுகாதார நிறுவனம் இணைந்து நடாத்திய இந்தக் கூட்டத்தில் எபோலா நோயை எப்படி கட்டுப்படுத்துவது என்பது பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

நோய் தாக்கிய நாடுகளில் இருந்து வெளிநாடுகளுக்கு பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேலும் அதிகப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த 3 நாடுகளிலும் 5இடங்களில் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அங்கிருந்து செல்லும் அனைத்து பயணிகளையும் கடுமையான சோதனைக்கு பின்னர் வெளிநாடுகளுக்கு பயணம் செய்ய அனுமதிப்பது, மேலும் அந்த நாடுகளில் இருந்து வரும் பயணிகளை அனைத்து நாடுகளும் தீவிரமாக கண்காணிப்பது என முடிவுகள் எடுக்கப்பட்டன.

எபோலா நோயை கட்டுப்படுத்தும் புதிய மருந்து ஒன்றைக்கனடா மருத்துவ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அந்த மருந்தை உடனடியாக பயன்படுத்துவது தொடர்பாக விரிவான ஆய்வு நடத்தவும் முடிவு எடுகக்ப்பட்டுள்ளது.


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of tha Regional Procurement Committee. Teaching Hospital, Jaffna, in vite sealed bids From eligible and qualified bidders for the Construction and renovation works in the Schedule below.

| Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs) | Validity period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In Million) | Minimum ICTAD Grada |
|---|---|---|---|---|---|
| Renovation and Modification of Ward No 26 Female site as Ward No 21 | 500.00 | 20.000.00 | 91 | 1.0 | C10 |
| Toilets Renovation of Ward No 27 | 500.00 | 47.000.00 | 91 | 2.30 | C8 |
| Construction of Corridor nearby Kitchen. | 500.00 | 12.000.00 | 91 | 0.59 | C10 |

1. Bidding will be Conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for Contract award, tha successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, training and Development (ICTAD)
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office. CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete srt of Bidding Documents in English Language May be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for tha cash payment for the bid fee from 27.10.2014 until at 4.00 pm on 04.11.2014 during office hours. Tha payment shall be made to the shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to tha address below at before 10.00 hrs on 05.11.2014 late bides will be rejected bids will be open at Directoe's Office. Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representtives who choose toattend.

**Director (Chairman),**
**Regional procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**24.10.2014.**

(C/3590)


# ஐ.நா. மனித உரிமை சபையின் உறுப்பு நாடாக இந்தியா தெரிவு

(நியூயோர்க்)

ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் உறுப்பு நாடாக இந்தியா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கான உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்ய நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் இந்தியா உறுப்பு நாடாக மீண்டும் தெரிவாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில், இந்தியாவின் பதவிக்காலம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில் இந்த தேர்தல் நடைபெற்றது.



உறுப்புரிமையை பெறுவதற்காக இந்தியா, வங்காளதேசம், கட்டார், தாய்லாந்து, இந்தோனேஷியா என்பன இரகசிய வாக்கெடுப்பில் போட்டியிட்டன. ஆனால் இந்திய மாத்திரமே வெற்றி பெற்றுள்ளது.மனித உரிமைச் சபையின் உறுப்புரிமை பதவியில் இரண்டு தடவைகள் அங்கம் வகித்த நாடுகள் மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட முடியாது என்பது ஐக்கிய நாடுகள் சபையின் விதி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க ஆசிய நாடுகள் உதவ முன்வர வேண்டும்

## அமெரிக்கா வேண்டுகோள்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பை அழிப்பதற்கு ஆசிய நாடுகள் உதவ வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜொன் கெர்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காகவும், எபோலா வைரஸை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்காகவும் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவுக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

அந்நாட்டு தலைவர்களை சந்தித்த கெர்ரி, நேற்று அவுஸ்ரேலியா, மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளை சந்தித்தார்.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பு சார்பில் போரிட வெளிநாடுகளில் இருந்து முஸ்லிம்கள் செல்கின்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக இந்த சுற்றுப்பயணத்தை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் அத்துடன்,

ஐ.எஸ்.ஐ.எஸ்.க்கு நிதி திரட்டுவது, அவர்களுக்கு ஆதர வான பிரசாரத்தை முன்னெடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோரை ஆசியநாடுகள் தடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

# கல்வியில் வியத்தகு மாற்றத்தை குறித்த காலத்தில் ஏற்படுத்தியுள்ளேன்

## சிந்தித்து உணர்வுபூர்வமாக செயற்படுங்கள்



மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள்,மாணவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரின் உச்ச உழைப்புக்கு ஊடாக கல்வி வளர்ச்சியில் இலங்கையின் இறுதி மாவட்டமாக காணப்பட்ட கிளிநொச்சியை முன்னோக்கி நகர்த்தி உள்ளோம்.

கடந்த கால கிளிநொச்சியின் கல்வித்துறையின் வெளிப்பாடுகள் அதனை நிரூபித்துத் காட்டியுள்ளன இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் வலய பாடசாலைகளின் அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி முன்னேற்றங்கள் தொடர்பில் குறைபாடுகளுக்கு மத்தியில் எமது இலக்கை எட்டிக்கொண்டிருக்கின்றோம். அதற்காக உழைக்கும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வன்னி மாவட்டம் முற்றுமுழுதாக அழிந்து போன பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றி அதன் பின்னர் கல்வியை வளர்திருக்கின்றோம் என்றால் அனைவரினதும், கடின உழைப்பும், அர்ப்பணமும்தான் காரணம்.

எந்தவொரு நாட்டிலும் இவ்வாறு அழிந்து போன தேசம் விரைவாக முன்னேற்றத்தை கண்டதில்லை. நாம் அந்த இலக்கை அடைந்திருக்கின்றோம் என்றால் எமது கூட்டு உழைப்பே காரணம். குறிப்பாக கல்வித் துறையில் மற்றவர்கள் வியக்கும் வகையில் நாம் எமது முன்னேற்றத்தை காட்டியிருக்கின்றோம்.

எமது முன்னேற்றத்தின் ஊக்குவிப்பாக எமக்கு நாம் எதிர்பார்த்த எந்த ஒரு பரிசும் கிடைக்கவில்லை. நாம் உழைப்பைக் காட்டினால் ஆதரவும்' வரவேற்பும் கிடைக்க வேண்டும் ஆனால், எமக்கு தொடர்ந்தும் ஆதரவற்ற நிலைக்கு எம்மை தள்ளும் செயற்பாடே காணப்பட்டு வருகிறது.

இது ஒரு துர்ப்பாக்கிய நிலைமை. இந்த பிரச்சினை எல்லாத் திணைக்களங்களுக்குள்ளும் இருக்கின்றது. அதிலும், கல்வித் திணைக்களத்திற்குள் இன்னும் அதிகமாக இருக்கின்றது.

மீள்குடியேற்றப்பட்ட காலத்தில் பாடசாலைகள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் நிலத்தில் இருந்து மாணவர்கள் கல்வி கற்ற நிலை காணப்பட்டது. பல பாடசாலைகள் திறக்க முடியாத நிலையில் இராணுவ முகாம்களாகவும், காணப்பட்டன.

அந்த நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி பின்னர் படிப்படியாக திருப்திகரமாக பௌதீக வளங்களை பாடசாலைகளுக்கு வழங்கியும். மேலும் பல குறைபாடுகளுக்கு மத்தியில் கல்வியில் நாம் எமது இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றோம்.

2011, 2012, 2013 ஆம் ஆண்டு காலகட்டங்களில் கல்வி அமைச்சு, ஆளுநர் இவர்களின் ஒத்துழைப்புடன் ஓரளவுக்கு திருப்திகரமான ஆசிரியர் வளத்தை அழுத்தங்களுக்கு ஊடாக நாம் பெற்றிருந்தோம்.

இதனால் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்த ஆசிரியர்கள் என் மீது அதிக கோபத்துடனேயே இருந்தனர் இதனையிட்டு நாம் கவலையடையவில்லை மாறாக கிராமங்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றோம் என்ற திருப்தியே ஏற்பட்டது என்றார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,கிளிநொச்சி வலய பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நிறைகளை வெட்டி அளக்கும் கடை உரிமையாளர் மீது நடவடிக்கை

## அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளலாம்

பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஏற்படும் இடர்கள் பிரச்சினைகள் தொடர்பில் உடனுக்குடன் பாவனையாளர்கள் முறையிடலாம்.

இவ்வாறு நுகர்வோர் அதிகார சபையின் யாழ். செயலக இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

மேற்படி விடயமாக இணைப்பாளர் த.வசந்தசேகரன் மேலும் தெரிவிக்கையில்,

பொருட்கொள்வனவின்போது பாவனையாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் 021 3219000என்ற தொலைபேசி இலகத்துடன் தொடர்பு கொண்டு முறையிடலாம்.

பொருட்கொள்வனவின் போது காலாவதியானவை, இலவச இணைப்புகள் வழங்காமை நிறைகுறைவானவை,மற்றும் அதிகரித்த விலையில் பொருட்கள் விற்பனை போன்ற பல்வேறு விடயங்களில் முறைகேடுகள் அவதானிக்கப்படும் பட்சத்தில் நேரிலோ அல்லது 021, 3219000 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இது குறித்த முறைப்பாடுகளை மேற்கொள்ளுமிடத்து அவ்வாறான வியாபாரிகள் மீது உடனுக்குடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ, 25)

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வவுனியாவில் நேற்று ஆரம்பம்

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போவுக்கு கையளிக்கப்பட்ட 10 பஸ்களின் சேவையை உத்தியோகபூர்வமாக அமைச்சர் றிசாட் பதியுதீன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போவில் இடம்பெற்ற இந்த நிகழ்வைத் தொடர்ந்து அகில இலங்கை மக்கள் இ.போ.ச. தொழிலாளர் சங்கத்தின் அலுவலகமும் டிப்போ கட்டடத் தொகுதிக்குள் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தின் மைதானத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். மாதர் எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒரே தடவையில் நாடளாவிய ரீதியில் 3,000 யுவதிகளுக்கு தையல் பயிற்சியுடன் தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வுகளையும் வவுனியாவில் அமைச்சர் றிசாட் ஆரம்பித்து வைத்தார். வவுனியாவின் அண்ணாநகர், ஈஸ்வரிபுரம், சூடுவெந்தபுலவு, மரக்காரம்பளை, கடுகுண்ணாமடு உள்ளிட்ட 7 இடங்களில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண பணிப்பாளர் எஸ்.அஸ்கர், வடமாகாணசபை உறுப்பினர் ஜெயதிலக, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, உதவி அரசாங்க அதிபர் திருமதி எஸ்.கர்ணன், முகைதீன், வர்த்தக கைத்தொழில் அமைச்சின் இணைப்பாளர் முத்துமுகமது, அமைச்சரின் மாவட்ட இணைப்பாளர் அப்துல்பாரி, பொலிஸ் அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கனடாவில் துப்பாக்கிச்சூடு ஜனாதிபதி மகிந்த கண்டனம்



கனடா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கண்டனத்தினை தெரிவித்துள்ளார்.

இவ்வகையான அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒரு போதும் இடமளிக்காது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் இவ்வகையான பயங்கரவாத செயற்பாடுகள் அனைத்து நாடுகளையும் சீர்குலைத்து வருகிறது எனவே நாம் இதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது என தனது ருவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார்.

கனடா ஒட்டாவா நகரில் அமைக்கப்பட்ட போர் நினைவகத்துக்கு அருகில் நின்ற பாதுகாப்பு வீரர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நேற்று முன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் துப்பாக்கிச்சூடு கனடா நாடாளுமன்றத்தினுள்ளும் தொடர்ந்து இடம்பெற்றதுடன், பதில் தாக்குதலில் குறைந்தது ஒரு துப்பாக்கிதாரி யாவது உயிரிழந்திருக்கலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

### பட்டதாரி....

ருத்தியமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், மேல் மாகாணத்தில் 10,500 பட்டதாரி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

### இந்த ஆண்டில்...

கியுள்ளதாக அவர்தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் உத்தரவு, நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைய 400 மீனவர்கள் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை 20 மீனவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக கணேஷமூர்த்தி மேலும் குறிப்பிட்டுள்ளார்

### மனித உரிமை...

மூன்று நாடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

சிரியா, மத்திய ஆபிரிக்க குடியரசு, இலங்கை ஆகியனவே இந்த நாடுகள். இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகள் தொடர்பில் மூன்று விசேட குழுக்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் பலஸ்தீனம், எரித்திரியா மற்றும் ஈராக் குறித்தும் விசாரணைகள் இடம்பெறலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த மாதம் நான் பதவியேற்றபோது, பெரும் நிதிப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் எனது அலுவலகம் முன்னெடுத்துள்ள பணிகளை பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன்.

ஐ.நாவின் முக்கிய தூண்களில் ஒன்றான மனித உரிமைக்கு தற்போது மிக குறைந்தளவு வளங்களே கிடைக்கின்றன. ஏனைய துறைகளுக்கு வழங்கப்படுவதை விட குறைவாகவே மனித உரிமைகளுக்கு வழங்கப்படுகின்றது. இது தொடரமுடியாது. மனித உரிமைகள் மீறப்படும்போது துஷ்பிரயோகங்களும், மீறல்களும் பாரிய மோதல்களை உருவாக்கும் போது, சகலவகைகளிலும் இழப்புகள் மிகப் பெரிதாகக் காணப்படுகின்றன. இவ்வாறு தெரிவிதுள்ள அவர், மனித உரிமை மீறல்களை கண்டுபிடித்து எச்சரிப்பதற்கான தனது அமைப்பின் திறனை அதிகரிக்குமாறும், ஆபத்தான சமிக்ஞைகள் வெளியானவுடன் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஐ.நா. சபையை கோரியுள்ளார்.

### இன முரண்பாட்டை...

படுத்த நிதிசேகரிப்பில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு உள்ளது. பாதுகாப்பு பிரிவு அவை தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடன் உள்ளது.

வெளிவிவகார அமைச்சு நாட்டின் நிலைமையை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தெரியப் படுத்தியுள்ளது. இலங்கையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடு இல்லாவிடினும் ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகிறது என்றும் இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

### ஆவா...

துடன் தொடர்புபட்டவர்கள் எனக் கூறி 12 பேருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் 3 வழக்குடன் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் ஒருவர் ஓரிரு நாட்களின் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், 10 பேரும் ஒரு மாதத்திற்கு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் ஆவா மட்டும் பிணையில் விடுதலை செய்வதற்கு பொலிஸார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அவ்வாறு எதிர்ப்பு தெரிவித்தமைக்கான காரணம் ஆவாவினால் தீங்கு விளைவிக் கும் ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்றும், இச்சட்டத்தின் படி நீதவான் நீதிமன்றில் பிணையில் விடுதலை செய்ய முடியாது மேல் நீதிமன்றமே விடுதலை செய்ய முடியுமென கூறப்பட்டது.

இந்நிலையில், கடந்த பங்குனி மாதம் 31 ஆம் திகதி ஆவா விடுதலை பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பொலிஸார் தமது அறிக்கையில், ஆவாவிடம் வீட்டின் பின்பக்க வாழைத்தோட்டத்தில் இரண்டு கைக்குண்டுகளும் வாள்களும் கண்டு பிடிக்கப்பட்டதென குறிப்பிட்டிருந்தனர்.

இதனை அறிந்த ஆவாவின் தந்தையார் வியப்படைந்தார். தனது வீட்டில் வாழை மரம் இல்லையென நீதிபதியிடம் உறுதிப்படுத்த கிராம சேவகரின் சான்று வழங்கப்பட்டது. இந்த சான்று ஆவணமாக கொண்டு பிணை விண்ணப்பத்தில் சான்றாக வழங்கப்பட்டது. மேல் நீதிமன்ற பிணை விண்ணப்ப விவாதத்தின் பின்னர் இரண்டு கைக்குண்டுகளும் வாள்களும் கைப்பற்றப் பட்டதாகவும், நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆவா சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கிராம சேவகரின் சான்றை ஆவா கைது செய்து 9 மாதம் விளக்கமறியலில் இருந்துள்ளார். இதுவரையில், பொலிஸார் எந்தவிதமான அடிப்படை சான்றுகளையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை. என தெரிவித்தார். ஆவா வின் குற்றச் செயல்கள் மேலோட் டமான கருத்து என்றும் பொலிஸாரிடமும் எந்தவித சான்றுகளும் காணப்படாத பட்சத்தில்50 ஆயிரம் காசு பிணையிலும், ஒரு இலட்சம் 3 ஆள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், மற்றைய 11 நபர்களுடனும் எக்காரணம் கொண்டும் எந்த உறவோ,தொடர்போ வைத்திருக்க கூடாதென்றும், ஒவ்வொரு நாளும் யாழ்.நீதவான் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டும் எனவும் நீதிமன்றின் அனுமதியின்றி வெளிநாட்டிற்கு செல்ல முடியாது. நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (25)

# கரவெட்டி இராஜ கிராம மக்கள் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு

## எங்களை வந்து பாருங்கள் என மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட இராஜ கிராமத்திலிருந்து இராய் வயல் வரை அமைக்கப்பட்ட கீழ் வழிந்தோடும் வாய்க்காலில் வெள்ள நீர் தேங்கி உள்ளது.


இதனால் அப்பகுதியூடாக பிரயாணத்தை மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தற்போது பெய்துவரும் மழையால் இவ்வாய்க்காலில் நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதால் அவ்வீதியூடாகச் செல்வோர் வெள்ளநீரில் நனைந்தவாறு செல்கின்ற அதேநேரம் போக்குவரத்து இடையூறும், விபத்துக்களும் ஏற்பட்ட வண்ணம் உள்ளன.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பல இலட்சம ரூபா செலவில் மீள் புனரமைக்கப்பட்ட வாய்க்காலின் நீர் வழிந்தோடும் பகுதி சரியான முறையில் உட்கட்டுமாணம் செய்யப்படவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதால் டெங்குதொற்று ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் சுகாதார பணிமனையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)



காலி மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ரேமன் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்தார். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றது.

# கிராம அதிகாரியின் வீட்டுக்கு கல்வீச்சு; தீவிர விசாரணை

கிளிநொச்சி, முரசுமோட்டை (கிளி-50) கிராம அலுவலர் எஸ். நந்தகுமார் என்பவரது வீட்டின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீதியில் நின்றிருந்த இனந் தெரியாத நபர்கள் சிலர் 10 இற்கும் மேற்பட்ட கற்களை கூரையின் மேல் எறிந்ததாக கிராம அலுவலர், தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தனது கிராம அலுவலர் பிரிவிலுள்ள சிலர் சட்டவிரோத மரக்கடத்தல் மற்றும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்களின் நடவடிக்கைகளை தான் தடுத்து நிறுத்திய தன் எதிரொலியாகவே இந்த கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலரின் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 350 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்சமயம் பெய்து வரும் மழை காரணமாக 329 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நேற்று மாலை தெரிவித்தார்.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் நாவாந்துறைப் பகுதியில் இருந்து 316 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பகுதியில் இருந்து 11 குடும்பங்களும், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் இருந்து இரண்டு குடும்பங்களும் இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கரவெட்டிப் பகுதியில் மின்னல் தாக்கம் காரணமாக ஒரு குடுபம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் வீடு ஒன்று பாதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்துள்ள 316 குடும்பங்களுக்கும் ஒரு வாரத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்த யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஏனைய குடும்பங்களுக்கு நிலைமைகளை அவதானித்து நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# வீதி விபத்தில் சிறுவன் மரணம்

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இரண்டரை வயதுப் பாலகன் ஒருவர் உயிரிழந்தார். வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தையும் அவரது இரண்டரை வயது மகனுமே காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் அவரது மகன் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் வட்டக்கச்சியைச்

சேர்ந்த ஜீவானந்தன் கம்சன் என்ற இரண்டரை வயதுப் பாலகனே உயிரிழந்தார். விசாரணைகளை கிளிநொச்சி.

பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வன்னியில் சேவையாற்ற விருப்பமா? யாழ்.ஆசிரியர்களிடம் கேள்வி

## ஆசிரியர் சங்க செயலாளர் கண்டனம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் வெளிமாவட்ட சேவை செய்யாத, கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச சேவைகளை நிறைவு செய்யாத் ஆசிரியர்களுக்கு வன்னிப்பகுதிக்கான இடமாற்றம் வழங்குவதற்கு வடமாகாணக்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் 55 வயதிற்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கு வடமாகாணக் கல்வி அமைச்சு அழைப்புக்களை அனுப்பி அவர்களின் ஒப்புதல்களைப் பெறுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறு அழைக்கப்பட்டவர்களுள் வெளிமாவட்ட சேவை செய்தவர்களும், வன்னிப்பிரதேச சேவைக்கு என கட்டாயமாக அனுப்பப்பட்டவர்களும், தீவக கல்வி வலயத்தில் நீண்ட காலம் கடமையாற்றிய வர்களும், கஷ்ட, அதிகஷ்ட பிரதேச சேவைகளை நிறைவு செய்தவர்களும், வயது முதிர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர்.

மேற்படி விடயமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் வடமாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவ்வாறான சேவைகளை நிறைவு செய்தவர்களை இடமாற்றம் செய்ய முடியாது. என்ற கோரிக்கையை முன்வைத்த போது, அதனை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், அதுபோன்ற சேவைகளைச் செய்தவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என உறுதியளித்துள்ளனர்.

இதுவரை வெளிமாவட்ட சேவை செய்யாத, அதிகஷ்ட, கஷ்ட பிரதேச சேவை செய்யாத 43 வயதிற்கு உட்பட்ட பெண் ஆசிரியர்களுக்கும், 48 வயதிற்கு உட்பட்ட ஆண் ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்குவதென்றே ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகள் அவ்வாறு சேவை செய்தவர்களை அழைத்து இடமாற்றம் பற்றி பேசியதால் பல ஆசிரியர்கள் மனக்குழப்பத்தில் உள்ளமையும், பாடசாலைக் கருமங்கள் அதனால் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அதிபர்களும், கல்வியாயளர்களும், அரசியல் பிரமுகர்களும் தமது ஆட்சேபனையை பொதுச் செயல்லாளரிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே இதுபோன்ற காரியங்களை இனிமேலாவது செய்யாதீர்கள் என பொதுச் செயலாளர் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துரைத்து ஆசிரியர்களின் தரவுகள் அவர்களின் கோவைகளில் உள்ளன. அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களை அழைத்து அவர்களைத் துன்பப்படுத்த வேண்டாமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஐந்து மாவட்டத்திற்கும் தொழில் நீதிமன்று மீள ஆரம்பிக்க வேண்டும்

## ஆணையாளர் கனகேஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமகாணத்தில் தொழில் நீதிமன்றம் இல்லாமையால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தெரியப்படுத்தவுள்ளதாக பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி விடயமாக தொழில் ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் மூடப்பட்ட தொழில் நீதிமன்றங்கள் இன்னமும் வடபகுதியின் 5 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

இப்பிரச்சினை குறித்து நீதி அமைச்சு, தொழில் அமைச்சு, மொழிசார்ந்த அமைச்சுகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ள நிலையில் நீதிமன்றத்தின் தேவை குறித்து முதலமைசசருக்குத் தெரியப்படுத்தி இதன் அவசியத்தை வலியுறுத்தவுள்ளதாகவும், இதன் மூலமே தொழிலாளர்கள் எதிர்நோக்கும் இடர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ‘கத்தி’ ரசிகன் மரணம்

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் கத்தி படம் பார்த்துவிட்டு குதூகலத்தில் வெளியே வந்த ரசிகர் ஒருவர் விஜய்யின் மிகப்பெரிய காட்சிப் பதாகைக்கு பாலாபிஷேகம் செய்கையில் தவறி விழுந்து பலியானார்.

கத்தி படம் தமிழகம் தவிர கேரளாவிலும் பிரமாண்டமாக வெளியாகியுள்ளது. கேரளாவில் மட்டும் சுமார் 200 திரையரங்குகளில் படம் வெளியாகியுள்ளது.

கேரளாவில் ஓடும் ரயில்களில் முதல்முறையாக தமிழ் படமான கத்தியின் விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வடக்கன்சேரியைச் சேர்ந்த உன்னி என்பவர் புதன்கிழமை கத்தி படம் பார்க்க திரையரங்கிற்கு சென்றபோதே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உயர்தர மாணவர்களுக்கு தகவல்தொழில்நுட்பம் தேர்வு

(கொழும்பு)

2015ஆழ் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தகவல் தொழில் நுட்பப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி குறித்த பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை இடம்பெறும் என, இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாடுபூராகவுமுள்ள ஆயிரத்து 176 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில். ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 784 பரீட்சார்த்திகள் தோற்ற வுள்ளனர்.

பரீட்சைகளுக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்காத மாணவர்கள் 0112 784 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை இந்தப் பரீட்சைகளுக்கு சிறைச்சாலையிலுள்ள 16 கைதிகளும் தோற்றவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.